REGD 4642 M.

ந்தா விபரம்
—
ஆண்டு ரூ 7,
„ 3 8 0

# திராவிடநாடு

பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம்

மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 12-2-50 | இதழ் 33

## மறைந்து விட்டார்!

★ ★

பிறப்பு
1887
செப். 17



மறைவு
1950
பிப் 4

★ ★

## மனதில் நிறைந்து விட்டார்!

# துயர கீதம்

பெருமிதத்துடன் வெளியிட்டுள்ளார்கள், போர்ப் புயலில் சிக்கிச் சிதறியுமுன் நாடு எவ்வளவு சிறந் சிறப்புடனிருந்ததோ அதைவிடப் பன்மடங்கு, இப்போது—செழித்துக் கொழித்திருக்கிறது, பார்! என்று பரவசமுடன் பட்டியல் தந்திருக்கிறார்கள். பார்க்கும்போது, நமது இதயத்தில் ஆச்சரியமும், அசகாய சூரர்கள் அவர்கள் என்ற அன்பு மொழியும் உதயமாகிறது-ஆம்! வாழ்க்கை, சிறப்புற, இயற்கையைத் தங்கள் ஏவலாளாகக் கொண்டு, எண்ண முடியாததையெல்லாம், திறன், செயல் வன்மை ஆகியவைகள் மூலம் சாதிக்கும், அருமை பெருமைகளை அறியும்போது!

“உணவுப் பொருள் உற்பத்தி உற்சாக மூட்டும்படி அதிகமாகியிருக்கிறது! விவசாயமும், விளைச்சலும், வளர்ந்திருக்கிறது—கால்நடைகள், சென்ற ஆண்டை விடச் செழுமையாக வளர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆடைகள் உற்பத்தியும் 1948-ஐ விட 1949-ல் அதிகமாகியிருக்கிறது. சுமார் 20 சதவிகிதம், அதிக உற்பத்தி செய்துள்ளோம்.

இந்த ஆண்டு மட்டும் 18 லட்சம் புதுத் தொழிலாளர்கள், ஆலைகளில் தொண்டாற்றும்படி செய்யப்பட்டிருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தை, விரட்டியடித்துள்ளோம். பள்ளிகளில், தொழில் துறை பற்றிய கல்வி பயின்றுவிட்டு 72 லட்சம் ‘காளை’கள், இந்த ஆண்டு வெளிவந்தனர். கட்டிட நிர்மாணம், போக்குவரத்து, ஆலைகள் எங்கும் அவர்கள் நிறைந்துவிட்டனர்—இடமில்லை, வேலையில்லை என்று அவலக் கூச்சல் எழும்பவில்லை. அத்தனை பேருக்கும்—இடம் தந்துள்ளோம்!

சென்ற வருஷத்தைவிட 20 லட்சம் பேருக்குக் கல்வி வசதி கிடைத்துள்ளது.

அதேபோல, நாட்டின் வருமான நிலையும் 17 சதவிகிதம் அதிகமாகியிருக்கிறது. உழைப்பாளிகள், தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள், உழவர்கள் எல்லோருடைய வாழ்விலும், முன்னைவிட அதிக நலன்களும், வசதிகளும் அதிகமாயிருக்கின்றன—மக்கள் வாழ்க்கைத் தரம் சென்ற ஆண்டைவிட, உயர்ந்திருக்கிறது”

அதிகமாகியிருக்கிறது.
உயர்ந்திருக்கிறது.

என்ற சொற்கள்தான் பட்டியலைப் படித்து முடிக்கும் வரையில், இருக்கின்றனவேயன்றி ஓரிடத்திலாவது, ‘முகாரி’யோ, ‘முடியவில்லை’ என்ற குறிப்போ காணவில்லை — துருவிப் பார்க்கினும் ‘தூசி’ அளவுகூடக் காண முடியவில்லை!

* • •

“உணவுப் பஞ்சம் விரைவில் வரலாம். உற்பத்தி அதிகமாகுமென எதிர்பார்த்தோம் — அப்படித்தான் தோன்றியது. ஆனால், என் செய்வோம்? இயற்கை மாதா, கருணை காட்டவில்லை—சில இடங்களில் பருவக் கோளாறு, புயல், மழையின்மை பல இடங்களில் விவசாயிகள் தொல்லைகள், வேலை நிறுத்தங்கள் — வீணான குழப்பங்கள்! விளைவு, வறுமை!

ஆடையா—சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் உற்பத்தி அதிகமாகவில்லை. போன ஆண்டு 43380 லட்சம்கஜம் துணி உற்பத்தியாயிற்று இப்போது 39180-கஜம் தான்! நூலும் முன்பு 14450 லட்சம் கஜம், இந்த ஆண்டு 13560 லட்சம் தான் உற்பத்தியாகியிருக்கிறது! துணி விஷயத்திலும் ‘உணவுப் பிரச்னை’தான்!

தீப்பெட்டிகள், கம்பளிகள், கால் ஜோடுகள், சிகிரெட், உப்புப் பொருள்கள், சோப்புகள், மின்சார விசிறிகள்—இவையெல்லாம் மக்களின் முக்கிய பொருள்கள்தா வாழ்க்கையில் அன்றாடம் தேவை படுவதுதான். ஆனால், என் செ வோம், இயற்கை அன்னை எங்களை சோதித்துவிட்டாள் — தொல் களைத் தந்துவிட்டாள் — நிலை மோசமாகி விட்டது, அவைக உற்பத்தி செய்ய முடியாத நிலை குழப்பமும் அதிகரித்து, நாடு மே மாகிவிட்டது! என் செய்வோ எனவே உற்பத்தி ‘பிரச்னை’ விட்டது!”

* * •

மோகன ராகத்தைக் கேட் கொண்டிருக்கும்போது, முகாரி கேட்க நேரிட்டால்......அழகை தேடிப் போகையில் அகோர செ பம் எதிர்வந்து நின்றால்...... வளவு வேதனையும் ஆத்திர எழும்புமோ, அதைவிட அதிக துயரமும், ஆவேசமும் தான் எ பும் இந்த இரு பட்டியல்களை ஏக சமயத்தில் பார்க்கும்பொழு

முதல் பட்டியல் மோகனம் இன்னிசை! இரண்டாவது முக ஒப்பாரி!!

இரண்டு நாடுகள், தங்களது டின் நிலவரம் பற்றி, விவர தந்துள்ளார்கள். கடந்த 194 தங்கள் நாட்டின் உற்பத்தி குறித்து பட்டியல் வெளியிட் ளார்கள் — மக்கள் வாழ்க்கை எப்படியிருக்கிறது, எங்ஙனம் கின்றனர், என்பது பற்றித்த தந்துள்ளனர்!

மகிழ்ச்சியுடன், தன் நாட்டு பற்றி ரஷ்யா தந்துள்ள வி தான், நாம் மேலே குறித்திரு மோகன—இன்னிசை!

வேதனையுடன் விளக்கம்தந் பது—இந்தியா—இலை! புதி சியலமைப்பு மூலம் பெய மாற்றப்பட்டிருக்கிறதே! — தேசத்தைப் பரிபாலனம் செ பாரதமாதாவின் ‘தவ’ப் பு கள் செய்தி—முகாரி!

இரண்டு நாடுகளின் சர்க் கடந்த 1949-ம் ஆண்டு ப தான், தகவல் தந்துள்ளார்கள்

ரஷ்யா பெருமிதம் கொள் —பெருமையுடன் பேசுகிறது களைப்பாருங்கள், எவ்வளவு

போர்ப் புயலில் சிக்கிச் சிரழிந்
ர் காங்கள்! ஒழிந்தது ரஷ்யா,
ழிந்தது பொதுவுடைமை என்றல்
எண்ணினர் பலர்—போரால்,
ய்விட்டது ரஷ்யாவின் திறமை
பெருமையும் என்றல்லவா
ப் பேசினர்! இப்போது பாருங்
எங்களை—காணமுடியாவிட்டா
ம், காட்டுகிறோம் புள்ளி விபரங்
அவைகளைக் காணுங்கள்—
லாவகையிலும் முன்னேறிவிட்
ம், சென்ற ஆண்டைவிட இந்த
ண்டு முன்னேறியுள்ளோம் —
றும் முன்னேறியவண்ணமேதா
ருக்கிறோம்! இருப்போம்!! போன
ண்டு உற்பத்தியான பொருள்களை
இப்போது 20 சதவிகிதம் அதி
பொருள்களை உற்பத்தி செய்
ள்ளோம், மக்களுக்கு முன்பும்
வையான பொருள்களைத் தந்து
ன் வந்தோம்—எனினும், வரவர
கள் தொகை வளரத்தானே
கிறது. அதற்கான வகையில்
பத்தியும் வளரத்தானே வேண்
—எனவே, உற்பத்தியை அதிக
துள்ளோம். கடந்த ஆண்டு
பலகஇருந்து, இப்போது
ளையாகிவிட்ட வாலிபர்களுக்
ல்லாம் வேலை கொடுத்திருக்
றும்—அவர்கள் வேண்டியதைச்
த்துகொண்டிருக்கிறார்கள் நாட்டு
ளின் நல்வாழ்வுக்கு — என்ற
கலமும், வெற்றி விளக்கமும்,
ன்படுகிறது, ரஷ்ய சர்க்கார்
த்துள்ள விளக்கத்தில்.

ஆனால் இந்திய சர்க்கார், புது
ல்லியிலிருந்து, இதே 1949ம்
ண்டுபற்றி இவ்வாரம் விடுத்துள்ள
ப்பொருள் உற்பத்தி பற்றிய,
க்கையிலோ வேதனையும் விசார
தான் நிறைந்து கிடக்கிறது.
ளின் வாழ்க்கைக்குத் தேவை
முக்கிய பொருள்களின் உற்
தி அதிகமாகவில்லை, குறைந்
க்கிறது என்ற பரிதாபச் சிந்து
ப்பட்டிருக்கிறது!

டையுற்பத்தி—கடந்த ஆண்டை
க் குறைந்துவிட்டதாம். உப்பு
கள், மின்சார விசிறிகள், தீப்
டிகள், சிகரெட், செருப்பு
கள் போன்ற பல, வாழ்க்கைப்
ருள்களின் உற்பத்தியும்
றந்துவிட்டதாம்.

வெளியிட்டிருக்கிறார்கள்—
நாடு விளக்கம் வேறு தந்திருக்கிறார்கள், "ஏன் அதிகமாகவில்லை தெரியுமா? முன்புபோல இப்பொருள்கள், மக்களால் அதிகமாக வாங்கப்படவில்லை. எனவே, பொருளுற்பத்தியில் முடக்கம் ஏற்பட்டிருக்கிறது" என்று. மக்கள் வாங்கவில்லையென்றால், எல்லோரில்லத்திலும் புடவையும் வேட்டியும் அதிகமாக ஆகிவிட்டது, தீப்பெட்டியும் சோப்பும் நிறையக் குவிந்துவிட்டது, எனவே வாங்காமலிருக்கிறார்கள், என்பதல்ல! முன்னைவிட அதிகமாக, இப்பொருள்கள் இல்லையென்ற கூச்சலும் குமுறலும், மக்கள் வீடுகளிலே நிறைந்தேகிடக்கிறது. சட்டையில்லாத சங்கரன், வேட்டியில்லாத வேலன், புடவை இல்லாத பொம்மி, சோப் கிடைக்காத சொக்கி, செருப்பு வாங்க முடியாத சிங்காரம்—நாட்டில், அதிகமாக இருக்கிறார்கள்—எனினும் 'கடைச் சரக்கு விலைபோகவில்லை எனவே, அவைகளை உற்பத்தி செய்வோர் அதிகமாகச் செய்யவில்லை' என்று. உற்பத்திக் குறைவுக்கான காரணங்களில் ஒன்றாக, சர்க்காரால், விளக்கம் கூறப்பட்டிருக்கிறது!

பொருள்கள் மக்களுக்குத்தேவையாக இருக்கின்றன —பொருளும் கடையிலிருக்கிறது—ஆனால் மக்கள் வாங்கவில்லை! ஏன்?—யோசிக்க வேண்டிய கேள்வி இது. கால்கஜம் துணிவாங்க, கடைக்குச் செல்கிறான் கந்தன். கையிலிருப்பதோ கால் ரூபாய்! விலை கேட்கிறான். கடையில். பதில் அரை ரூபாய் என்று வருகிறது. எப்படி வாங்க முடியும் அவனால்! பேசாது திரும்புகிறான் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்—அரை ரூபாய் சேர்த்துக்கொண்டு பின்னர் வரலாம் என்று திரும்பிவிடுகிறான்!

இதுதான் நாட்டு மக்கள் நிலை—இன்றியமையாத பொருள்கள் வேண்டுமென்று விரும்புகிறார்கள் மக்கள்—ஆனால் அவைகளைப் பெற முடிவதில்லை! காரணம், பணக் கஷ்டமும் — பொருள்களின் விலையுயர்வும் அவர்கள் கழுத்தை நெரிக்கிறது, இருப்பதை வைத்துக் கொண்டே காலம் தள்ளுவோம் என்று எண்ணுகிறார்கள்!

விற்பனை செய்யும் வியாபாரியோ, குறைந்த விலைக்குக் கொள்முதல் செய்த பொருள்களை விற்க இசைய மாட்டான் — விற்கவும் முடியாது, முதலும் போய்விடும் கடையும் காலியாகிவிடும் என்பதால்! விலையைக் குறைப்பதும் அவன் கையிலில்லை. அவன் பொருள்களை உற்பத்தி செய்பவனல்ல—வாங்கி விற்பவன்! ஆகவே, உற்பத்தி செய்தவன், பொருள்களின் விலைகளைக் குறைத்துத் தந்தால், வியாபாரியும் குறைத்து விற்பான், குறைந்த பணத்துக்கு மக்களும் பொருள்களைப் பெற முடியும்!

உற்பத்தியின் மூல கர்த்தர்களாக நாட்டிலிருப்போர்களோ—முதலாளிமார்கள், பணம் தேடிப் பெட்டியில் சேர்ப்பதையே 'பாழும் ஜன்மம் எடுத்ததின் பலன்' என்று கருதும், 'மகானுபாவர்'கள்! அவர்களிடம் உற்பத்திப்பொருள்களின் விலைகளைக் குறைக்க வேண்டுமென்று கூறினாலோ, "நாங்கள் என் செய்வோம். எங்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் கிடைப்பதே திண்டாட்டமாயிருக்கிறது. அப்படிக் கிடைத்தாலும் ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டியிருக்கும் சம்பளமோ மிகவும் அதிகமாயிருக்கிறது. குறைத்தாலோ, வேலை நிறுத்தங்கள்! எனவே என்செய்வோம்?" என்று முகாரியை, நாசுக்குடன், பாட ஆரம்பித்து விடுகின்றனர்!

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நிலைபற்றி கேட்க வேண்டியதில்லை. உள்ளக் குமுறலும் 'உழைக்கிறோம் வாழ முடியவில்லை' என்ற ஏக்கமும் ஆத்திரமும் தான் அவர்கள் இதயங்களிலே நிறைந்துகிடக்கின்றன.

ஆலையரசர்கள் பொருள்களின் விலையைக்குறைக்க இயலாது என்று கூறி உற்பத்திக்கான செலவு அதிகமாயிருக்கிறது என்று காரணங்காட்டுகின்றனர்—காரணம் காட்டுவதற்கு, அடிக்கடி ஆலைகளில் நடைபெறும் "வேலை நிறுத்தங்கள்" நல்ல உதாரணமாகிவிட்டன! ஆனால், அவர்கள் சம்பாதிக்கும் பணத்தையும், ஆலை ஆரம்பிக்கும்போது போட்டமுதல், ஆண்டுக்கு கிடைக்கும் நிகரலாபம் ஆகியவைகளையும் கணக்கெடுத்துப் பார்த்தால் — ஒவ்வொருவரும் எவ்வளவு 'இலாபக்கொள்ளை' அடித்திருக்கிறார்கள் என்பதுதெரியவரும்!

முதலாளி வர்க்கத்தின் ஆசையே தன்லாபம் என்றும் குறையக்கூ

டாது என்பதுதான். ஒரு பொருள் மூலம், அதிகலாபம் சம்பாதிக்க வேண்டுமென்றால், அதற்குள்ள ஒரே வழி அந்தப் பொருளின் விலையை அதிகமாக்கிவிற்பதுதான்.

கத்தரிக்காய்—கடையில் தேங்கி விட்டால், நேற்று வீசை நான்கணா விற்றது, இன்று மூன்றணா என்று ஏலங்கூறவேண்டிய நிலை ஏற்பட்டு விடும்! கத்தரிக்காய் அதிகமாகக் குவிந்துவிட்டது—ஆகவே தாராளமாகக்கிடைக்கும் என்ற எண்ணத்தில், மக்களும், குறைந்த விலை கொடுத்து வாங்குவார்கள். வர, வர கத்தரிக்காய், மார்க்கெட்டில் அதிகமாகக் குவிந்துவிட்டால், கத்தரிக்காய்க்கு இருந்த 'கிராக்கி' குறையும்—விலையும் குறையும்! முன்பு ஒரு கூடை விற்றால் நான்கு ரூபாய் சம்பாதிக்கக்கூடியவன், இப்போது அந்த நான்கு ரூபாய்களைக்காண முன்னைவிட பலகூடைகத்தரிக்காய் விற்கவேண்டி நேரிடும்!

இதேபோல, பொருள்கள் உற்பத்தி அதிகமாகிவிட்டால், அவைகளின் விலைகள் குறைந்து, 'கிராக்கி' இல்லாமற்போய், லாபமும்குறைந்துவிடும்!

குறைந்த பொருள்களைக்கொண்டு நிறைந்தலாபம் பெறுவது ஒன்றுதான் முதலாளிமார்களின் லட்சியமாகும்.

தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில், காப்பி உற்பத்தி மிகுந்தநாடு. அங்கு, அதிகமானகாப்பிக்கொட்டை உற்பத்தியாகி விட்டால் அவைகளைக் கொண்டுபோய் அமேஸான் நதியில கொட்டு வார்களாம்!

முன்பு, வெளிநாடுகளில் காப்பிக் கொட்டைக்கிருந்த 'விலையும்' கிராக்கியும்' குறைந்துவிடுமோ, இப்போது அதிகமாயிருக்கிறது என்பதால், என்றபயம் காரணமாக இங்ஙனம் செய்வார்களாம்—காப்பித் தோட்ட முதலாளிகள்! காப்பிக்கொட்டையை அதிகம் அனுப்பினால், மக்களுக்கு சகஜம்போலக் கிடைக்க ஆரம்பித்து, "கிராக்கி" இல்லாமற்போய், இலாபம் குறைந்துவிடுமல்லவா!

இதேபோலத்தான், முதலாளி வர்க்கம், வீணுக ஆக்கினாலும் ஆக்குமேயொழிய தன்வியாபாரத்துக்கு குறைந்தலாபம் வருவதை என்றுமே சகிக்காது!

இந்த நிலைதான் இப்போது, இந்நாட்டிலிருப்பதும். ஆலைகளும், தொழிற்சாலைகளும், பணம்படைத்த முதலாளிமார்கள் வசம் இருக்கிறது. அவர்களோ, இலாபம் சம்பாதிப்பதில் குறியுள்ளவர்களாக இருக்கிறார்கள். எவரும், 'தேசபக்த'ர்களாகவோ' "இகபரம் வெறுத்த முனி புங்கவராகவோ" இல்லாத காரணத்தால், வர, வர இலாபத்தை எப்படி அதிகரிப்பது என்பதையே இலட்சியமாகக்கொண்டவர்களாக இருக்கிறார்கள்!

உற்பத்தி செய்யும் பொருள்களை, அதிகமாக்கவும் ஆசை எழும்புவதில்லை—விலையைக் குறைக்கவும் விரும்புவதில்லை! யாராவது கேட்டால் தொழிலாளர் கோரிக்கைகளைக் காட்டித் தப்பித்துக்கொள்கிறார்கள்!

தொழிலாளர்களைப்பற்றி அவர்கள் கூறுவதிலும், அப்படியே உண்மையென்று ஏற்கமுடியாதென்றாலும் ஓரளவு உண்மையும் இருக்கத்தான் இருக்கிறது!

பொருள்களை உற்பத்தி செய்வதில் உற்சாகம் இல்லை

நாட்களை எண்ணுவதில்தான் கருத்து இருக்கிறது.

இது ஏற்படாமல் இருக்கமுடியாது! உழைக்கும்தான்ஓட்டைக்குடிசையில், வேதனையுடன் போராடும்போது, தன் உழைப்பால் ஒருவன் உண்டுகொழுப்பதைக்காணும்போது வயற்றெரிச்சலும், "நான் உழைக்கிறேன். அவன் வாழ்கிறான் அப்படிக் கஷ்டப்பட்டு நான் எதற்காக உழைக்கவேண்டும்" என்றஎண்ணமும் எழும்பத்தான் செய்யும்!

இந்தநிலை இன்று தொழிற்சாலைகளில்மட்டும் என்றல்ல, விவசாயத்துறையிலும் வெகு வேகமாகப்பரவி விட்டது. விவசாயி, ஊக்கமிழந்துவிட்டான்—எதற்காக நான்உழைக்கவேண்டும், எவனோ சாப்பிட நான் ஏன் உழைக்கவேண்டும் என்ற கேள்விகள் முளைத்துவிட்டன! விளைவு, இன்று வயல்களிலே புயல்! மக்கள் வாழ்க்கையிலே திண்டாட்டம்!!

X X X

இந்த நாடு—பாலைவனமல்ல; ரஷ்யாவைவிட நீர்வளமும், நிலவளமும் நிரம்பியது! நெற்களஞ்சியங்களும்—நிறைய மக்களும் நிரம்பிய நாடு இது! "புண்ய பூமி" என்று போற்றப்படுவது. எனினும் இங்கு வளமில்லை, வறுமை! பசுமையில்லை; பரிதாபம்! களிப்பு இல்லை; கலக்கம்!

உற்பத்திப் பெருக்கம்பற்றி, எவ்வளவு திட்டங்கள் தீட்டியுள்ளோம் தெரியுமா, எத்தனை அறிஞர்கள் ஆலோசனையில் மூழ்கித்தது தெரியுமா, அத்திட்டம் என்று, ஆட்சியாளர் கூறலாம். இவ்வளவு "திட்டங்கள் வகுத்தும் எங்களைத் தூற்றுகின்றீர்களே" என்று துயரகீதம் பாடலாம்; விளக்கம் தரலாம்! ஆனால் விளக்கம் வேதனையைத் தீர்த்து விடாது! விவேகம் வேண்டும்; நாடும் மக்களும் எப்படி நன்மையுறுவது என்பதுபற்றி சிந்திக்கவேண்டும்!

* * *

வேதனை ரஷ்யாவில் இல்லை—காரணம், அத்தகையதாக அந் நாட்டை, ஆக்கிவைத்திருப்பது தான்.

தேவைக்கான பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும்.

உற்பத்தி செய்வது நமக்காக நமது மக்களுக்காக! முதலாளியின் பணப்பெட்டி நிரப்புவதற்காக அல்ல!

என்ற எண்ணம், ரஷ்யமக்களிடையே பரவி விட்டது; தனிப்பட்டவர் ஆதிக்கமும், உழைக்காமல் வாழ்பவனும் இல்லாமலிருப்பதால்!

நாடு மக்களுடையது! எல்லா நிலமும் மக்களுடையது! எ தொழிலும் மக்களுடையது!

என்று, "மக்களுடைய" — என் வார்த்தைக்கான உண்மை மதிப்பு தரப்பட்டு, அது அமுல் நடத்தப்பட்டு வருவதால்தான் ரஷ்யமக்க உள்ளத்தில், வேண்டியபொருள்களை நாமே தயார் செய்யவேண்டும் நமக்காகச் செய்யவேண்டும் என் கடமைப் பொறுப்பின் காரணமா உற்பத்தி வளர்ந்துகொண்டேயிருக்கிறது! மகிழ்ச்சி மலர்ந்துகொண்டு இருக்கிறது!!

* • •

இந்திய சர்க்காரோ, துயர கீ எழுப்பியுள்ளனர்! எல்லாம் ம ளுடையது என்ற நிலை ஏற்ப

(15-ம் பக்கம் பார்க்க)

கதையல்ல!

# ★ குங்கும அலங்காரி ★

[அரங்கண்ணல்]

அருமையான ரோஜா!
ஆளைமயக்கும் சோலை!
கண்ணைப்பறிக்கும் வைரக்கம்மல்!
கருத்தைக் கவரும் 'சென்ட்'!

* * *

நரைத்துப் போன தலை!
நாடி தளர்ந்து நோய்நிறைந்த
டம்பு!
அழகு மறைந்து அவலட்சணத்
து!
நாற்றம் எடுத்துப்போன உடல்!

* * *

வர் விபரம் அறியாதவரல்ல,
த்து வேட்டுக்க்காரருமல்ல!
தவர், பல செய்திகளைக்கண்டு
ு' வழங்கும் நிலையில் இருப்ப
ிந்தனையுடன் நாட்களை நகர்த்
ண்டிய பொறுப்பிலிருப்பவர்
 ஆங்கில வார இதழின் ஆசிரி
னினும் மேலே நாம் குறித்
பது போலப் பேசியிருக்கிறார்.
ன ரோஜா, சோலை, கம்மல்,
 ஆகியவைபற்றி விளக்கிக்
ன்ன அழகு தெரியுமா, என்
தைக் கொள்ளைகொண்டது,
ளவு மோகனச் சாமான்கள்
து அவள் நிற்கிறாள், என்று
ர கூறிவிட்டு, ஆனால் அத்
யும் அணிந்திருந்தும் அவள்
தரியுமா, என்று பதிலும் தந்
ிறார்!

மையான ரோஜா—நரைத்
ன தலையில், ஆளைமயக்கும்
நோய் நிறைந்த உடம்பில், கம்
அவலட்சணக் காதில் என்று
 கொடுத்திருக்கிறார் — பாவம்,
 சோலை ஆகியவைகளின் அழகு
ம பற்றி விளக்கினால்
தா, அவை எங்கு இருந்தால்
என்ற எண்ணம் போதும்!

X X

என்னைக் கவர்ந்தவர்
எங்குமே காணமுடியாதவர்
உலகிலேயே ஒருவர்
உயர்ந்த மதியினர்

என்று 'சுதந்திரா' வார இதழ் ஆசிரியர் காசா சுப்பராவுக்கு இவ்வாரம், லண்டன் செல்வதையொட்டி, புதிதாகத் தோன்றியுள்ள இந்தியக்குடியரசுக் கட்சியினர், அளித்த விருந்தின் போது பதிலளிக்கையில் தோழர் சுப்பராவ் புகழ்ந்து பேசியுள்ளார். கொடுத்து வைத்தவர் நாம், இவ்வளவு சிறப்புப் பொருந்தியவர் நம்மிடையிலிருப்பது! ஆகா, அவருடைய அதிமேதையும், திறமையும், செல்வாக்கும், மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற ஆர்வமும் யாருக்குவரும்! என்று, புகழ்ப்பாணி பாடியிருக்கிறார்—வேறுயாரைப்பற்றி அவர் பாடப்போகிறார், இந்தியப் பிரதமர் பண்டிதநேரு வைப்பற்றித்தான்!

ஆனால், அவ்வளவு தூரம் புகழ்ந்து போற்றிய மறுவினாடியே அவரது, வாயிலிருந்து இந்த அருமையான சொற்கள் உருண்டோடி வந்திருக்கின்றன, வேதனையுடன் வெளிவந்திருக்கின்றன!

மோசமான நிலை
இருண்ட—பயங்கரக்காட்சி
அதிகார வெறி
கோஷ்டிச் சண்டை

நிறைந்து, கிடக்கிறதாம்! ஆட்சி நிர்வாகம், இரண்டு ஆண்டுகளில் எண்ண முடியாத அளவுக்கு மோசமாகப் போய்விட்டது — லஞ்சம்! ஊழல்!! சுதந்திரம் வந்ததும் புது வாழ்வு பெறலாம் என்று நம்பியதெல்லாம் வீணாகிவிட்டது—ஆள வந்தவர்கள் அதிகார ஆசையும், பதவி வெறியும் பிடித்துப்போய் வேட்டையாடுகின்றனர்! நல்லது செய்வார்கள் என்று நாம் எதிர்பார்த்த தலைவர்கள் எல்லாம், சுயநலமிருந்து, பதவி வேட்டையாடுகின்றனர் — காங்கிரஸ் கட்சி இருண்டு விட்டது, நாசமாகி வருகிறது, நாற்றம் நிரம்பிக்கொண்டிருக்கிறது, மோசமான வழிகளில் ஈடுபட்டு வருகிறது, சட்டசபையும் மந்திரிப்பதவியுமே காங்கிரஸ் தலைவர்களின் இலட்சியங்களாகிவிட்டன! என்று, வேதனையும் சோகமும் நெஞ்சில் இடிக்க "கங்காதரா சாகிறாயோ" என்ற 'மெட்டில்' ஒப்பாரி வைத்திருக்கிறார்!

நண்பர் காசா சுப்பராவ், எதிர்க்கட்சிக்காரரல்ல, எதுவும் தெரியாதவருமல்ல. காங்கிரசின் அருமை பெருமைகள் பற்றி எத்தனையோ தடவைகள், தனது எழுத்துக்களால் அர்ச்சித்தவர். இப்போதும். அதற்காகவே தனது, பேனாவை அசைத்துக்கொண்டிருப்பவர். ஆங்கிலத் தினசரியின் ஆசிரியராக இருந்த போதும் சரி, வார ஏட்டின் ஆசிரியராக இருக்கும்போதும் சரி, இந்நாட்டை உய்விக்கக் கூடியது காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் என்று கூறுபவர்—கருதுபவர் ஆந்திர கேசரிகளிலே ஒருவர், முன்னணி வீரர் என்று கருதப்படுபவர். அவர், தான் இவ்வளவு அருமையான நற்சாட்சிப் பத்திரம் வழங்கியுள்ளார் காங்கிரசுக்கு—தனது கட்சிக்கு!

"காங்கிரஸில் ஊழல்கள் மலிந்து போய் விட்டன. பதவி வேட்டையே குறிக்கோளாய் விட்டது. அழிந்து, நாசமாகி வருகிறது!"

என்று அஞ்சாமல் வெளியிட்டிருக்கிறார். இதே வார்த்தைகளை நாம் கூறினால், எதிர்க்கட்சி ஏடு என்ற காரணத்தால் நமக்குத் தூற்றலும், தொலையும்தான் பரிசாகக் கிடைக்கும்!

தனக்கு அளிக்கப்பட்ட விருந்தின்போது இங்ஙனம் பேசியதோடு மட்டுமல்ல, இவ்வாரம் 'சுதந்திரா' இதழிலும், காங்கிரஸ் 'கறையும்

படலம்' பற்றிக் கண்ணீர் சிந்தியுள்ளார்.

X X X

உண்மையில், காங்கிரஸ் இன்று, நரைத்துப்போன தலை, நாடி தளர்ந்து போன உடம்பு, அவலட்சணக்காது, நாற்றம் எடுத்துப்போன உடலாகி விட்டது! மக்கள் மன்றத்தில் காங்கிரஸ் கட்சிக்கு இருந்த செல்வாக்கும், மதிப்பும் இன்று பறந்துபோய் விட்டன!

இன்று நாட்டில், காங்கிரஸ் பொதுக் கூட்டம் என்றாலே, 'போதும்! பேசிக் கிழித்தார்கள், எல்லாம் பித்தலாட்டம்' என்ற பேச்சுகளையே மக்களிடை காண்கிறோம். 'மந்திரி வந்தாலும் சரி, மகாதலைவர் கொண்டுவரப்பட்டாலும்சரி, காங்கிரஸ் பொதுக்கூட்டங்களில், 'கூட்டம்' இருப்பதில்லை! ஒரு காலம் இருந்தது—காங்கிரஸ் கூட்டங்களிலே ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்துகொண்ட காலம். 'வந்து விட்டார் இவர். வரப்போகிறார் அவர்' என்று குதித்துக் கூத்தாடியகாலம்! 'ஜே!' 'ஜே!' என்று கர்ச்சித்துக் கண் மண் தெரியாமல் கதறியகாலம்!

அந்த நாட்கள் இன்று மறைந்து விட்டன—மறக்க முடியாது. காங்கிரஸ் மாநாட்டிற்கே, மக்கள் வருவார்களோ, வரமாட்டார்களோ என்ற அச்சம், இன்று எழும்பியிருக்கிறது.

நாளது 11, 12 தேதிகளில் சென்னையில் நடைபெறும் தமிழ் நாடு காங்கிரஸ் மாநாடு நடைபெறும் இடம்—பொருட்காட்சி நடைபெற்ற தேனும் பேட்டை மைதானத்தில்! ஜனங்கள் கூடிக் கலைந்த இடத்தில்!

அவ்வளவு தூரம், காங்கிரஸ் கூடாரத்திலேயே கலக்கம் உருவாகியிருக்கிறது. அந்த நிலைக்குக் காங்கிரசின் செல்வாக்குக் கரைந்து போய்க் கொண்டிருக்கிறது. சூறாவளியில் அகப்பட்ட இலவம் பஞ்சுபோல ஆகிவிட்டது, காங்கிரஸ் நிலை!

அதன், எதிரொலிதான், "சுதந்திரா" தோழர் எழுப்பியுள்ள துயர கீதம்—சோகச் சொற்கள்!

"நாம் விசுவாசம் கொண்டிருந்த காங்கிரஸ் தலைவர்கள், ஓரிருவரைத் தவிர, யாரும் தாங்கள் அடைந்த அதிகார போதைக்கு ஆட்பட்டுவிட்டனர். பெற்ற பதவியை இழக்காமலிருப்பது எப்படி? அடைந்த அதிகாரத்தை எப்போதும் வகிப்பது எவ்வகையில்? என்ற ஒரே நோக்கத்துடன் தங்களை ஆதரிக்காதாரை சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் மட்டந்தட்டி வருகின்றனர். பதவி வேட்டை காங்கிரஸ் இயக்கத்தை, இருள் மயமாக்கி நாசப்பாதைக்கு நடத்திச் செல்கிறது"

அழகாகப் படம் பிடித்திருக்கிறார்—கதரை மறக்காத கனவான், காங்கிரஸ் வாழவேண்டும் என்பதில் கவனம் கொண்ட சீமான், நண்பர் காசா!

காங்கிரஸ் கட்சியின் கரையும் நிலையை இவ்வளவு, விளக்கமாகத், தெளிவாகக் காட்டிவிட்டு, அதே நேரத்தில் நேரு பற்றி புகழ் கீதம் பாடியிருக்கிறார். அதைக் கண்ட போதுதான், தலைப்பில் பொறித்திருக்கும் 'நரைத்த தலை-அங்கு அழகான ரோஜா!' என்ற வரிகள் நம் நினைவுக்கு வந்தன.

"என்னைப் பண்டித நேரு மிக மிகக் கவர்ந்தவர். இன்று உலகில் எங்கணும் காணமுடியாத தலைவர் அவர். நாட்டு மக்களின் நலனும், சுகவாழ்வும்தான் அவரது எண்ணம்"

என்று குறிப்பிட்டுள்ளார், அவர் கரையும் காங்கிரசைத் தாவி நிற்கும் ஒரே தூண், என்று அன்புச் சொற்களால் குறிப்பிட்டுள்ளார். காசா—மட்டும் என்பதல்ல, அவரைப் போலவே காங்கிரஸ் பற்றும், அதே நேரத்தில் அதன் போக்குப் பற்றி கவலையும் கொண்ட அவரைப் போன்ற பலர், முகாரியில் ஆரம்பித்து அடாணாவில் போய் முடிப்பவர்களாகத்தான் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் நிலைபற்றி விளக்கத் துவங்கிக் கடைசியில் 'நேருவின் பெருமை' பற்றியே முடிக்கிறார்கள்.

ஆற்றல் நிரம்பியவர், அளவிலாத் தேசபக்தியுடையவர், கெட்டிக்காரர்—இதுபோன்ற போற்றுரைகளால் நேரு, பட்டேல் போன்றோரைப் போற்றுகின்றனர். அவர்கள் போற்றல்களை நாமும் மறுக்கவில்லை. அந்த நற்பண்புகள் அவர்களிடம் இருந்தாலும் இருக்கலாம். "இருக்கும் தலைவர் சிறப்பு மிக்கவர். அவர் இருக்கும் இடமோ சிக்கல் நிறைந்தது" என்று, காசா அவர்கள் கூ... வதை ஏற்றும் கொள்ள... ஆனால், அதே வேளையில் நம... நல்ல ரோஜா - ஆனால் நரைத்த த... யில் என்ற வரிகள்தான் நினைவு... வருகின்றன!

* * *

நேருவின் பண்பு பற்றியோ, ப... டேலின் தியாக புத்தி பற்றி... நண்பர்கள் கூறுவதை நாம் மறு... வில்லை—ஆனால் அவர்கள் இருக்... இடம் எத்தகையது?—இந்த இ... தில் சிந்தனையைக் கொஞ்சம் அதி... செலவழிக்க வேண்டும்.

அவள் நெற்றியில் அழகான ... கம் இட்டிருந்தாள். இரத்த... போன்ற சிவப்பு நிறக் குங்கும... எங்கே தயாரித்தது தெரியுமா, ... படித் தயாரிக்கப்பட்டது தெரியு... அதோடு கலக்கப்பட்ட 'ஜிகி... பளபளவென்று, ஜொலித்தது! ... மும், ஜிகினாவும் நெஞ்சைப் ப... தன! என்று, குங்கும அலங்கா... ரத்தைப்பற்றிக் கூறுகிறார்—"அ... யறிந்தார்." அருகே இருப்ப... 'அது சரிதானய்யா, குங்கும அ... காரம்! ஆள் எப்படி, அழகா, ... மையா?" என்று கேட்கிறார் ... லுடன்!

'அதுவா' என்று, இழு... விட்டு, பல் முறம்போல இருக்... நிறம் காக்கை, தலை நரைத்... உடல் உலைப் போல......எ... வர்ணித்தால், கேட்க எவ்வ... நகைச்சுவையாக இருக்கு... அதைப் போலத்தான் இருக்கி... தலைவர் பெருமைபற்றிப் பேசிவி... அதே நேரத்தில் தலைவர் இருக்... கட்சியின் கேவலம் குறித்துக்க...

### வகுப்புவாதம்!

பழைமைப் பித்தத்திலிருந்... வகுப்புவாதம் கிளம்பியிரு... கிறது. பழங்காலநோக்கில் வி... யங்களை அணுகுவதாலும், ப... கால ஸ்லோகங்களைக் கோஷி... தாலுமே வகுப்புவாதம் தோன்... கிறது!

புதுடெல்லி, பிப் 4. } பண்டித நே...

ர்கள் வார்த்தைகளைக் கேட்கும்
து!
திறமையுள்ளவர்கள் தான்-ஆனால்
கேயிருக்கிறார்கள்! நல்லவர்கள்
ன்—ஆனால் அவர்கள் இருக்கும்
ந்லே எத்தகையது? உயர்ந்த
யினர்தாம் — ஆனால் உட்கார்ந்
ருக்கும் இடம் எது!
இவைகள் கேட்கப்பட வேண்டிய
ள்விகள் மட்டுமல்ல—சிந்தனைக்
ம் உரியவை.

குங்குமத்தால், அழகான ரோஜா
ல், பளபளக்கும் வைரத்தால்
சென்ட்' வாசனையால், சேலை அழ
ல்—அகோர சொரூபி, நோய்
றைந்த உடலுடையாள், சிங்காரி
கிவிட முடியாது! அழகியென்று,
ப்புப் பெற்றுவிட முடியாது—
கள் குருடர்களுமல்ல, சொன்ன
ம் நம்புவதற்கு, தலையாட்டி விடுவ
ற்கு!
சுற்றிலும் தீ — நடுவிலே மான்!
துதான், இவர்கள் கூறும் 'நல்ல
கள்' நிலை—தீயைத் தாண்டினால்
பலாம், இல்லாவிடில் தீக்கு
ரையாகத்தான் நேரும்!

நேருவின் பொதுவுடைமைப்
க்கு, சமரச எண்ணம், சாத்
க் குணம் பற்றி, 'காசாக்கள்'
யிருக்கின்றனர், கேட்டிருக்கி
ம். ஆனால் இன்று, காங்கிரஸ்
லவர்தார்கள், இருக்கும் நிலை
படி இருக்கிறது!

'என்ன செய்வது, இந்த அவல
லையைப்போக்க என்று தெரிய
லை. மக்கள்தான் இதுபற்றிச் சிந்
கவேண்டும். தங்கள் இதயத்தில்
வழிகளைத் தேட வேண்டும்"
றும் வேதனை அடைந்துள்ளார்,
பர் சுப்பாராவ்.

காங்கிரஸ் கட்சியின் நிலைபற்றி,
கள் சிந்தித்து, ஒருமாற்ற நிலை
க்காண வேண்டுமாம்! கூடாரத்
குத்தும் வெட்டும் அதிகமாகி
ட்டது, கூடிநிற்போரே தலையிட்டு
சமரசம் செய்து வையுங்கள்
று அழைக்கிறார்! வேடிக்கையாக
க்கிறது, நமக்கு—இதைக்கேட்க!

* * *

அழகான ரோஜாவால், குங்கும
லங்காரத்தால், சீரழிந்தவள்
த்து மயக்கும் சிங்காரியாகிவிட
யாது — குங்குமம் மறைந்துவிடும், ரோஜாவும் கசங்கிவிடும் சில மணி நேரத்துக்கெல்லாம்! இதைச் சிந்திக்கவேண்டும், காங்கிரஸ்மீது 'பக்தி' கொண்டிருக்கும் நண்பர்கள்!

தலைவர்கள் — முயன்றும், தடுக்க நினைத்தும் தடுக்கமுடியாத நிலைக்குப்போய்விட்டது, காங்கிரஸ்கட்சி. கட்சியை வளர்க்கும், மாகாணத்தலைவர்கள், பிரச்சாரகர்கள், சுயநல சொரூபங்களாகி விட்டனர். காசா, எழுதுவதுபோல,

> காமராஜ்—தமிழ்நாட்டுத்தலைவர்—மந்திரிகளை ஆக்குவதையே, ஆட்டிவைப்பதையே பொதுநலத் தொண்டாகக் கொண்டுவிட்டார்! ரங்கா—ஆந்திரத் தலைவர், தனக்கு வேண்டியவர்களைத் தட்டிக் கொடுத்து, தன்தலைமையைக்காப்பாற்றிக்கொள்வதையே கடமையாகக்கொண்டுவிட்டார்!!
>
> கேளப்பன் — கேரளத் தலைவர். இந்த அசம்பாவிதங்கள் சகிக்காமல், நேர்மையோடு, விலகிக் கொண்டுவிட்டார்!

கட்சியின் நரம்பும், சதைகளும், நோய்க்கிருமிகளுக்கு ஆளாகிவிட்டன! நாற்றமும், நடுக்கமும் உடம்பெல்லாம் பரவி விட்டது—இதைக் குங்கும அலங்காரத்தால் மறைத்துவிடமுடியாது-பெரிய தலைவர்களின் பெருமையைச் சொல்லி, கட்சியைக் காப்பாற்றிவிடமுடியாது!

இதைக்கவனிக்க வேண்டுகிறோம், நாட்டுவாழ்வில் அக்கரையும், கறையும் காங்கிரஸ்பற்றி வேதனையும்—அதேவேளையில் நேருவின்பெருமை, பட்டேலின் அருமைபற்றிப் பேசிக்கொண்டும், வேதனைப் பிம்பங்களாக இருக்கும் நண்பர்களை!

## எதிர்பார்க்கலாமா?

"நன்மைக்கான திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. மக்களின் கல்வி முன்னேற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியவில்லை. வைத்தியவழி, சுகாதார நன்மை ஆகியவைகளையும் கவனிக்க இயலவில்லை காரணம் பணக்கஷ்டம்தான்."

இராணுவம், பாதுகாப்பு என்ற பெயரால் ஏராளமான செலவு ஆகிவருகிறது. இதை ஓரளவு குறைப்பதென எனது சர்க்கார் முடிவுசெய்திருக்கிறது"

இந்தியக் குடியரசுத் தலைவர், பதவியிலமர்ந்ததும், தனது ஆட்சிக் கொள்கைகள்பற்றி, விளக்கி ஆற்றிய சொற்பொழிவில் சிந்தியிருப்பவை இவை.

அவரது பேச்சில், வேறு எத்தகைய குறிப்பிடத்தக்க, மாற்றமும் இல்லை. 'பழையபெத்தான்' என்பதே, தென்படுகிறது, எனினும் இராணுவச் செலவைக் குறைக்க முடிவு செய்திருக்கிறோம் என்று, அவர் குறிப்பிட்டிருப்பது, அகமகிழ்ச்சிக்குரிய சேதியாகும்.

இராணுவம், அவசியம் வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து நாடுகாப்பாற்றப் படுவதற்கு என்று காரணம் காட்டி ஆண்டுக்கு 157-கோடி ரூபாய்களைச் செலவிட்டு வருகின்றனர், இந்தியசர்க்கார். இத்தொகை, வரும் வருமானத்தில் பாதிக்கு மேற்பட்டதாகும்.

இவர்கள், கூறுவது போல, இந்தியாவை எதிர்நோக்கி ஒன்றும் பிரமாதமான போர் வந்துகொண்டில்லை, எனினும், 'என்னிடம் எவ்வளவு படைகள் பார்த்தாயா?' என்று பெருமை பேசிக்கொள்வதற்கும், பக்கத்து நாடான பாகிஸ்தானுக்கு தலைவர்கள் 'சவால்' விடுவதற்காகவும் தான், படைபலம் அதிகரிக்கப்பட்டு வருகிறது.

நாடு, ஆபத்துக்கு ஆளாகிவிடும் என்று தெரிந்தால், 'ஆகஸ்டுபுரட்சி' நடத்தும் ஆட்கள் இப்போதில்லை. உண்மையில், பெற்ற சுதந்தரம் பறிபோகும் எனத்தெரிந்தால், பதறித் துடித்துக் காப்பதற்கு கர்ச்சனையெழுப்பும் 'காளை'கள் ஏராளமாய் இருக்கின்றனர்.

எனினும், படையினரின் அதிகாரிகளை அதிகப்படுத்திக்கொண்டும், அவர்கட்குக் கொடுக்கப்படும் சம்பளங்களைப் பன்மடங்கு உயர்த்திக் கொண்டும், கோலாகலத்தர்பார் நடத்தி வருகிறது, இந்திய சர்க்கார்.

இச்செலவைக் குறைக்கப்போவதாக, தலைவர் தமது குடியரசுத் துவக்கவிழாப் பேச்சில் குறிப்பிட்டுள்ளார். இது, பேச்சளவில் நிற்கப்போகிறதா, அல்லது 'குறைத்தோம்' என்று பாசாங்கு காட்டுவதுடன் நின்று விடப்போகிறதா என்பதை, பொறுத்திருந்துதான் கவனிக்க வேண்டும்.

**திராவிட நாடு**

ஞாயிறு 12—2—50 [காஞ்சி

# நினைவில் நிலைத்தார்!

*

நினைக்கவும் முடியவில்லை, நெஞ்சம் வேகிறது, நினைவெல்லாம் தடுமாறுகிறது, எண்ணமெல்லாம் 'ஈரோட்டு வாழ்வில்' பதிகிறது; ஏக்கமும், துக்கமும், கண்களில 'அருவி' யாக மாறுகின்றன!

அவர் மறைந்துவிட்டார்! அன்புப் பெரியார்—குணக் குன்று—சென்று அடைந்துவிட்டது சமாதிக்குள்! அவரது சாந்தம் தவழும் முகம்—இனி நம்மால் காண முடியாது; அன்பு தவழ அழைக்கும் அந்த ஆசைச் சொற்களை—அந்தோ! இனி நாம் கேட்க முடியாது!

அவரது கடைசிமூச்சு 4—2—50 சனி மாலை 4½-மணிக்கு காற்றோடு கலந்துவிட்டது; இந்த உலக வாழ்வைவிட்டு அவர் சென்றுவிட்டார்; அவர் இறந்துவிட்டார்!

எண்ணவும் முடியவில்லை, எழுத்துக்கள் தடுமாறுகின்றன! இதயம் பொங்கும் கடலாகிறது!

தென்னாடு—ஒரு வைத்திய வள்ளலை இழந்துவிட்டது. பெரியார்—தன் அன்புச் சகோதரரை இழந்துவிட்டார். கண்ணம்மையார் தன் அண்ணனை இழந்துவிட்டார், அரங்கநாயகி அம்மையார் தன் வாழ்க்கைத் துணைவரை இழந்துவிட்டார்! சம்பத், செல்வன், மிராண்டா, செல்லா—நமது குடும்பத்தார்—தந்தையை இழந்துவிட்டனர்! நாம் ஒரு நல்லவரை இழந்துவிட்டோம்-குளிர்த் தென்றலை, நீரருவியை' இழந்துவிட்டோம்!

• • •

கண் முன்னே ஓடி வருகிறது, எல்லாம் கனவு போலத் தெரிகிறது!

"உடம்புக்கு ஒன்றும் கேடில்லை. என் தோழர்கள் நாடகம் நடத்துகிறார்கள். அதுவும் இந்த ஊரில்! அதை நான் போய்ப் பார்த்தால் என்ன? வியாதிதானே அதிகமாகும்! போனால் போகட்டும்! அதற்காகப் பயந்து வீட்டிற்குள்ளே கிடக்க வேண்டுமாக்கும். முடியாது! என்னையும் அழைத்துப் போங்கள்!!"

என்று தள்ளாத நிலையிலும், கூச்சலிட்டார், சடந்த மாதம் ஈரோட்டில் இயக்கநிதி நாடகம் நடைபெற்றபோது. அந்த அன்புக் களஞ்சியம், மறைந்துவிட்டது! நம்மையெல்லாம்விட்டு 'அமைதி' தவழ் முகத்துடன் சமாதிக்குள் அடக்கமாகிவிட்டது!

அறிவுப் பிரச்சாரம் எந்த வடிவத்தில், எங்கு நடைபெற்றாலும் அதை எப்படியாவது போய்ப் பார்க்க வேண்டுமென்ற அவா அவரை எப்பொழுதுமே ஆட்கொண்டிருந்தது. ஈரோட்டிலிருந்து செல்வார்—சென்னைக்குச் சினிமாப் பார்க்க! வெறும் வேடிக்கைக்காகவோ அல்லது உல்லாசத்துக்காகவோ அவர் சினிமாப் பார்க்கச்செல்வதில்லை. அறிவுவளர்ச்சிக்கான கருத்துக்கள் ஏதாவது ஒரு சினிமாவில காட்டப்படுகின்றன என்று தெரிந்தால் உடனே புறப்பட்டுவிடுவார் — தனியாகவல்ல — குடும்பத்துடன்.

"அவசியம் எழுதியனுப்பவேண்டுமெனக் கருதிவிட்டேன். சித்த வைத்தியம் சீர்குலைகிறது. கட்டுரைகளை எழுதியனுப்பிக் கொண்டே இருப்பேன். பிரசுரிக்கவேண்டும்!" என்று கடமையுணர்ச்சியுடன், அன்புக் கட்டளையிடுவது போல, கடிதம் எழுதிய கரங்களை இனிக்காண முடியாது—ஒரு மாதங்கூட ஆகவில்லை!-அதற்குள் உணர்வற்று, செத்துப் போய்விட்டது!

சிந்தனை குழம்புகிறது, அவரை நினைக்க நினைக்க! அவர் காட்டிய அன்பையும், ஆதரவையும் எண்ணினால் இதயம் எரிமலையாகிறது!

• • •

'கோடை வெயில்' போன்ற கொந்தளிப்பு இயக்கத்தில் வீசினால் அவர் குளிர்தரும் சோலையாக இருந்தார்! 'கொடுஞ் சொற்கள்' என்ற ஈட்டிகளால் தாக்கப்பட்டால், அதனால் ஏற்படும் புண்களை ஆற்றும் மருந்தாக இருந்தன அவரது அன்பு மொழிகள்!

அவர் மறைந்துவிட்டார்; நம்மை எல்லாம் விட்டுப் பிரிந்துவிட்டார்! இயற்கை வழியை எய்திவிட்டார்!

ஈ. வே. கிருஷ்ணசாமி — ஈரோ
மக்களின் இதய பீடத்திலமர்ந்தவ
சுயமரியாதை, திராவிடத் தோழ
களின் எண்ணங்களிலெல்லாம்நிறை
தவர். ஆட்சியாளரின் அடக்
முறைகளுக்கு ஆளானவர் — பகு
தறிவுப் பத்திரிகைகளின் ஆசி
ராக இருந்தவர்; சித்த வைத்திய
தின் காவலராக இருந்தவர்; இல்லா
வர்களின் பிணியைப் போக்கு
'வள்ளலாக' விளங்கியவர்!

அவரை இழந்துவிட்டோம்! ஒ
குணக் குன்று — நம்மிடை
இருந்து பிரிக்கப்பட்டுவிட்டது!

கண்ணீர், கவலை, இழந்த
பெரியாரைத் திருப்பித் தரப்போ
தில்லை. தன் வாழ்வைப் பிறர்க்கெ
உழைத்து, தன் பெயரை இந்நாட்
மக்களின் இதயங்களில் செதுக்கி
கொண்டுவிட்டார்— இலட்சிய மு
னேற்றத்திற்கென அருமைத் தம்
மார்களை நமக்கு அளித்துவிட்
மறைந்துவிட்டார்! நமது நினைவி
நிலைத்துவிட்டார்!

தேம்பி நிற்கும் குடும்பத்தாருட
நாமும் தேம்பவேண்டியதாக
தானிருக்கிறது.

எனினும், ஏக்கமும் துக்கமு
இழந்த 'வள்ளலை' நமக்குத் த
போவதில்லை!

அவர் காட்டிய பாதையில், அன்
வழியில் நடப்போம். அவர
ஆசைகளை நிறைவேற்றுவோம்!

அவரது பிரிவால் வருந்தும் அ
வருந்தும் எமது ஆறுதல் மொழி
களை உரித்தாக்குகிறோம்.

## ஏஜண்டுத் தோழர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

ஏஜண்டுத் தோழர்களிற் பல
தங்கள் பாக்கிகளைக் குறித்த கால
தில் அனுப்பாமலும், கடிதம் எழு
னால் பதில் எழுதாமலும் இரு
றார்கள்.

1950 ஜனவரி முடியவுள்ள
பாக்கி முழுவதையும் இவ்வறிக்
கண்டதும் அனுப்பத் தவறு
ஏஜண்டுகளுக்கு முன்னறிவி
எதுவுமின்றி 19—2—50 முதல் ப
திரிகை அனுப்புவது கண்டிப்பா
நிறுத்தப்படும் என்பதைத் தெ
வித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி

"திராவிடநாடு"

# இந்தோனேஷியாவின் எதிர்காலம்

★ ★ ★

சபாமண்டபம் அழகாக அலங் கரிக்கப்பட்டிருந்தது. விதவிதமான உடையலங்காரங்களுடன் பல தேசத்து அரசியல் பிரதிநிதிகளும் அமர்ந்திருந்தனர். விசயலட்சுமி பண்டிட்—குதூகலமாக, புத்தாடை அணிந்து பூரிப்புடன் அமர்ந்திருந்தார். அவருடைய ஆடம்பரமான உடைகூடச் சபையிலிருந்தோரை ஆகர்ஷிக்கவில்லை; வந்திருந்தவர்களில் ஒருவருடைய உடையலங்காரமே எல்லோர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது”!

என்று, இந்தியக் குடியரசுத் துவக்க தினத்தன்று, குடியரசுத் தலைவர் பதவியேற்ற மண்டபத்தின் சிறப்புப்பற்றி ஒருநிருபர் விமர்சனம் செய்கையில், விபரமாகக் குறிப்பிட்டிருந்தார் — சென்னைத் தினசரி ஒன்றில் வெளிவந்திருந்தது!

அவ்வளவு சிறப்புடன் குறிப்பிடப் பட்டிருந்தவர் வேறுயாருமல்ல, இந்தோனேஷியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சுகர்னோவின் மனைவியார்தான்.

இந்தியக் குடியரசுத் துவக்க விழாவத்தின்போது, கடந்த டிசம்பரில் உதயமான இந்தோனேஷியக் குடியரசுத் தலைவர் சுகர்னோ, தனது மனைவியாருடன் வந்து கலந்துகொண்டார். இது, இந்தியாவுக்கும் இந்தோனேஷ்யாவுக்கு மிடையே வளர்ந்துவரும் நட்பையும் நேசத்தையும் காட்டுவதாகும்.

டச்சு ஆதிபத்தியத்தின் கீழ் அடிமைப்பட்டுக்கிடந்த இந்தோனேஷியா, சுதந்திர பூமியாகிவிட்டது. ஆங்கில ஆதிபத்தியத்திடம் சிக்கிச் சுழிந்த இந்தியாவும் சுதந்திர நாடாகிவிட்டது. இருநாடுகளும், ஆசியாவில் இருப்பவை என்பதால் மட்டுமல்ல, மேற்கு நாடுகளின் ஆதிபத்தியத்தில் சிக்கிக் கிடந்தவை. எனவே, பரஸ்பரம் ஒற்றுமையும், அன்பும் இருநாட்டின் தலைவர்களிடை யே பரிமளிக்கின்றன.

இந்தோனேஷியா—இன்று, இங்குள்ளோர் நாவில் அதிகமாக நடமாடுகிறது. பத்திரிகைகளிலும், சுகர்னோ வருகை, புறப்பாடு, பேட்டி முதலிய விபரங்கள் அதிகமாக வருகின்றன.

தன் தாய்நாட்டின் விடுதலைக்காகப் போராடி வெற்றிகண்ட ஒரு தலைவருக்கு. மரியாதையும், புகழ்ச் சொல்லும், பூமாலை சூட்டலும் அளிக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியது—எல்லோருடைய பாராட்டுக்கும் உரிய விஷயம்.

இந்தோனேஷியா விடுதலைபெற்று விட்டது, சுதந்திரமடைந்துவிட்டது—சுகர்னோ தலைமையேற்று அரசாங்கத்தை நடத்திவருகிறார். குழந்தைப் பருவத்திலிருக்கும் அக்குடியரசின் நிலைபற்றி, மக்கள் நன்குணர வேண்டியது அவசியமாகும். விடுதலைப் போரை நடத்திச் சென்ற காங்கிரஸ் தலைவர்கள் எப்படி ஆள வந்தார்கள் ஆனார்களோ, அதேபோல இந்தோனேஷிய விடுதலைக் கிளர்ச்சியைத் தலைமை தாங்கி நடத்திச் சென்ற, சுகர்னோவும், ஹட்டாவும், குடியரசின் தலைவராகவும், பிரதமராகவும் ஆகிவிட்டார்கள்.

நாடு — குடியரசாகி விட்டதேயொழிய, தீர்க்கப்பட வேண்டிய உள்நாட்டுப் பிரச்னைகள் ஏராளமாக இருக்கின்றன.

இரண்டாயிரம் மைல் தூரம் பரவிக் கிடக்கும், வளங் கொழிக்கும் நாடான, இந்தோனேஷியாவுக்கும்—‘இந்தியா’வின் நிலைமையே ஏற்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 15 ராஜ்யங்கள் இருக்கின்றன - இந்திய சமஸ்தானங்களைப்போல! இந்த ராஜ்யங்கள், டச்சுக்காரர்களால் சிருஷ்டிக்கப்பட்டவையாகும். இவை எப்போதும், சுதந்திரக் கிளர்ச்சியை எதிர்த்தே வந்திருக்கின்றன. எனினும், ஹேக்கில் நடைபெற்ற மாநாட்டில், டச்சுக்கெதிரான நாட்டில் ஒரு ஐக்கிய முன்னனி இருக்கவேண்டும் என்பதற்காக, டச்சு ஆட்டுவைத்த பல ஆட்டப்பொம்மைக்குட்டி ராஜ்யங்களை, சுகர்னோவைச் சேர்ந்தோர் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்த குட்டிராஜ்யங்களின் கோலாகலத் தர்பார் பற்றி அறிந்தால் மிக்க விநோதமாயிருக்கும்!

பாலித் தீவு—இந்தோனேஷியத் தீவுகளில் ஒன்று. அங்கு ஒருவன், ஒருநாள் அத்தீவை ஆளும் ராஜா ஒரு ஊளை என்று சொன்னானும். ராஜாவிடம் கூறினார்கள். விசாரணையோ, விளக்கமோ எதுவும் கூறப்படவில்லை! கேட்டதுதான் தாமதம்—ஒரு ஆண்டு சிறைவாசம் தண்டனையாக அளிக்கப்பட்டு அவன்கொண்டுபோய்ச் சிறையில் தள்ளப்பட்டானும்!

அவ்வளவு மூர்க்கத்தனமும், பிரபுத்துவப் புத்திகொண்டவர்களுமே இந்த இராஜாக்கள். இந்தப் பிற்போக்குப் பிண்டங்களை ஒடுக்கி, ஜனநாயகத்தை மலரச் செய்யும் பொறுப்பு, குழந்தைப் பருவத்திலிருக்கும் இந்தோனேஷியக் குடியரசின், தொல்லைகளில் ஒன்றாகும். அதோடு கிழக்குச் சுமத்திரா—இன்னும் அட்டகாசம் நிரம்பிய சுல்தான்கள் வசமே இருக்கிறது. புகையிலை, ரப்பர் ஆகிய பொருள்கள் அங்கு ஏராளம். எனவே, ஆங்கில அமெரிக்க முதலாளிகள் அங்கு கூடாரம் அடித்துக்கொண்டு கொட்டமடித்து வருகிறார்கள்—டச்சு ஆதிபத்தியமும் ‘தன் செல்லப் பிள்ளை’ போலக் கண்காணித்து வருகிறது. இதைச் சமாளித்து; அங்கு வாழும் மக்களிடையேயும் சுதந்திர நிலையை உண்டாக்க வேண்டியதும் புதுச் சர்க்காரின் பொறுப்பாகும்.

இந்தியா — சுதந்திரம் அடைந்தும் எவ்வளவு சங்கடங்களில் அகப்பட்டுக்கொண்டு அதைச் சமாளிக்கும் திறமையும், சாதுர்யமும் இல்லாமல் எப்படி விழிக்கிறதோ, அதேபோன்ற தொல்லைகள் அங்கும் நிறைந்து கிடக்கின்றன.

இவைகளைப்பற்றி ஆண்டிடனாத் என்கிற அமெரிக்கப் பத்திரிகையாளர் தந்திருக்கும் தகவல்கள்,

உண்மையில், இந்தோனேஷியக் குடியரசுமீது, நமக்கு அனுதாபத்தையே உண்டாக்குகின்றன.

* * *

ஒரு பரந்த நாட்டை நிர்வகிக்கும் சக்தி இப்போது இந்தியாவைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் சர்க்கார் வசம் இல்லையென்பதை நம் கண்முன் நாம் காண்கிறோம். நேரு, பட்டேல், பிரசாத் போன்றவர்கள், நாட்டின் விடுதலை வீரர்கள், சுதந்திரப் போரில் முன்னணியிலிருந்தவர்கள். இதை மறுப்பதற்கில்லை! ஆனால், கிளர்ச்சி செய்வது வேறு; நாட்டை ஆள்வது வேறு!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், இரண்டாவது உலகப் போரின் காரணமாகத் தனக்கேற்பட்ட தொல்லைகளைச் சமாளிக்கும் நோக்கத்துடன், இந்தியாவைவிட்டு வெளியேற முடிவு செய்தது. 'அதையொட்டி, கிளர்ச்சி முன்னணியிலிருந்த காங்கிரஸ் கட்சி வசம், அதிகார மாற்றம் செய்து கொடுத்துவிட்டு 'நல்லபிள்ளை' போல வெளியேறிவிட்டது. அன்னியப் பிடிப்பை அகற்றுவதில் முனைந்து கிடந்த கிளர்ச்சித் தலைவர்கள், எதிர்பாராத விதமாக நாட்டை நிர்வகிக்க வேண்டியவர்களானார்கள். அதன் விளைவாக, தொல்லைகளையும் பிரச்னைகளையும் சமாளிக்கும் வகையும் வழியும் புரியாது திண்டாடி வருகிறார்கள்! இதே நிலைமைதான் இன்று, அங்கு நீடிப்பதும்!

அந்நிய ஆதிபத்தியத்தை முறியடிக்கும் முயற்சியில் தன்நாட்டு மக்களை ஒன்று திரட்டப் போரிய வல்லமை பெற்றிருந்தது—இந்தோனேஷிய விடுதலைக் கட்சி. ஆனால், விடுதலை பெற்றதும், அதை நிர்வகிக்கக் கூடிய அவ்வளவு ஆற்றல், அங்கு இல்லை!

நேருவைப் போல, மக்கள் மன்றத்தில் அதிக செல்வாக்கும், கவர்ச்சியும் பெற்றவர், சுகர்ணோ. பிரசங்க வன்மையும், பேச்சுத் திறனும் மிக்கவர்; அதேபோல அவசரமும், ஆழ்ந்து யோசிக்கும் தன்மையும், அதிகம் இல்லாதவர்! அவர், ஆழ்ந்த மேதையோ, அல்லது மனோதிடம் உடையவரோ அல்ல!

பட்டேல் இங்கு இருக்கிறாரல்லவா, இதைப் போலவே 'இரும்பு நெஞ்சம்' உடையவர்தான், குடியரசுப் பிரதமராக இருக்கும் டாக்டர் ஹட்டா. தேசிய இயக்கத்தை நடத்திச் சென்ற தீரர், தேசப் பற்றுமிகுந்த தியாகி, எடுத்த காரியத்தை கடைசிவரை முடித்தே தீருவேன் என்ற பிடிவாதம் நிறைந்தவர். எனினும் நிர்வாக சக்தி நிறைந்தவரல்ல!

இந்தியாவைப் போல இந்தோனேஷியாவும் அதிக செல்வம் கொழிக்கும் நாடு—புதிதாகக் குடியரசு ஆன தேசம்.

இந்தோனேஷியர்கள் ஒரு இந்தோனேஷிய மொழியை யுடையவர்கள். பொதுக் கலாச்சாரமும், முஸ்லிம் மதத்தையும் பெற்றிருப்பவர்கள். எனினும், தகராறுகளையும் சச்சரவுகளையும் கிளப்பக்கூடிய பல 20—மொழிகளும், பழக்கங்களும், கொண்ட பல பகுதிகள் அங்கு இருக்கின்றன!

### அவரது கருத்து!

"இந்தியக் குடியரசுக் கொண்டாட்டத்தின் முக்கியத்தை மக்கள் உணரவில்லை. ஏற்பட்டமாறுதல், அவர்கள் கவனத்தைக் கவராததால், பூரண உற்சாகம் இல்லை"

டெல்லி, ஜன 31. } பிரதமர் நேரு.

நீண்ட காலம் அடிமைப்பட்டுக் கிடந்த காரணத்தால், அங்கு நிர்வாகத் திறனுள்ளவர்களோ, பொருளாதார நிபுணர்களோ அதிகம் இல்லை.

இந்தோனேஷியாவில், சிறுபான்மையினராக இருக்கும் சீனர்கள், பொருளாதாரத் துறையிலும், ஏனைய வகைகளிலும், டச்சு ஆதிபத்தியத்தின்போது, முன்னணியிலிருந்தனர்.

இந்தியாவைப் போல, அந்நியர் என்றதும் பயமும், மரியாதையும் அதிகம் இந்தோனேஷிய மக்களிடையில் இருந்த காரணத்தால்—அந்தச் சமுதாயத்தில் காரியங்களை நிறைவேற்றும் நிர்வாகிகள் இல்லை!

அதே வேளையில் டாக்டர் சுமித்திரோ போன்ற 'தப்பிப் பிறந்த' அறிஞர்கள் இருந்தாலும், அவர்கள் தேசிய இயக்கத்தில சம்பந்தம் கொள்ளாதவர்கள் என்ற காரணத்தால், அவர்களுடைய அறிவுரைகள், புறக்கணிக்கப்படுகின்றன—இங்கு, அரசியலமைப்பு வல்லுநர் பேராசிரியர் இரத்னசாமி கூறினால், ஏற்காது; அல்லாடி சொன்னால் அதை ஏற்கிறார்களல்லவா, காங்கிரஸ் தலைவர்கள். அதைப்போல!

இந்தியாவைப் போலவே பல இக்கட்டுகளில் சிக்கியிருக்கும் இந்தோனேஷியாவில் - கம்யூனிஸ்டு, சோஷியலிஸ்டுக் கட்சிகளும் மிக்க செல்வாக்குப் பெற்று வருகின்றன! இப்போது ஆட்சி அதிகாரம் பெற்றுவிட்ட தேசீய இயக்கம், இவைகளை யெதிர்த்து நிற்கவேண்டிய பொறுப்பையும் பெற்றிருக்கிறது.

"அமெரிக்கக் கூடாரத்திலோ அல்லது ரஷ்ய முகாமிலோ நாங்கள் சேரமாட்டோம். எங்களது கொள்கை நடுநிலைமையாக இருந்து நன்மை காணுவதுதான்" என்று இந்தியா கூறுவதைப் போலவே இந்தோனேஷியத் தலைவர்களும் கூறி வருகின்றனர்-எனினும், அமெரிக்க ஆதிக்கம், அங்கும் வலிவுறலாம் என்ற அறிகுறிகள் தென்படுகின்றன!

நாட்டை அந்நியப் பிடியினின்றும் விடுவித்து விட்டார்கள், வேகம் நிறைந்த வீரச் செயல்கள் மூலம். அதைக் காக்க விவேகம் வேண்டும்.........

சுகர்ணோ, நேருவுடன் கைகோர்த்துக்கொண்டு நிற்கிறார். காண அருமையாகத்தான் இருக்கிறது படத்தில்! இரு நாடுகளும், அந்நிய ஆதிபத்தியத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டவை. வெளிநாட்டாரை எதிர்த்துப் போராடிய தேசீய இயக்கங்கள்தான் ஆட்சிப் பொறுப்பை நிர்வகிக்கின்றன. இருநாடுகளுக்கும் ஏறக்குறையச் சமாளிக்க வேண்டிய பிரச்னைகளும் அதிகமாகத் தான் இருக்கின்றன!

சுகர்ணோ—நேரு படத்தை மீண்டும் ஒருமுறை பார்த்தால் நமக்கு "புயலில் சிக்கிய கப்பல்" நினைவுக்கு வருகிறது.

கப்பல் புயலில் சிக்கிக் கிடக்கிறது. அதை விட்டுத் தப்பவேண்டும்.. தப்புமா? வளரும் முற்போக்குக் கட்சிகளால், தேசீய இயக்கத்தின் வாழ்வு பாதிக்கப்படாமலிருக்குமா? அதற்கான பாதையில் நடந்து செல்வார்களா, சுகர்ணோவும் ஹட்டாவும்? கேள்விகளுக்குப் பதிலை எதிர்காலம்தான் தரவேண்டும்! ❋

# மகத்தான சக்தி

## மண்ணாக வேண்டாம்!

"அரசியல் வசதிகள் அவர்களை ஆட்டிவைக்கின்றனர்!

அறியாமையும், கல்வியில்லாமையும் அவர்களைச் சொல்லிய படி ஆடச்செய்கிறது!

தொழில் 'இயக்கங்களில் அரசியல் தலைவர்கள், புகுந்து அடாத வழியில் அழைத்துச் செல்கிறார்கள்!

விளைவு, பயனில்லை; வேதனை தான் இருவருக்கும்!"

இந்தியாவின் தலைசிறந்த அறிஞர் எம். என். ராய், கடந்த 4-ந்தேதி கல்கத்தாவில், ஆற்றிய அறிவுரையில், இந்தியத் தொழிற் சங்கங்கள் பற்றியும், தொழிலாளர் பற்றியும் குறிப்பிட்டுள்ளார் இவ்விதம்.

சிந்தனை நிரம்பிய அவரது சீரிய கருத்துக்கள், தொழிலாளர் நலனில் அக்கரைகொண்டோர், யாவரும் கவனித்து, கவனத்திலிருத்திக்கொள்ள வேண்டியவையாகும்!

நாட்டில்—உழைத்து வாழுபவர்கள் தொகைதான் அதிகம். உலகம் உருவாவதும், உற்பத்தி பெருகுவதும், இன்பம் முகிழ்ப்பதும், அவர்கள் சிந்தும் வியர்வையினால்தான். தங்கள் வியர்வை விருந்துமூலம்,மக்களை மகிழ்விக்கும் தொழிலாளர்கள் நிலையோ—சூறாவளியில் அகப்பட்ட துசு! சுழலுக்கு ஆளான கப்பல்!

வாழ்வில் வளமில்லை; வறுமையும் ஏக்கமும தாண்டவமாடுகிறது. உழைக்கிறார்கள்; வாழமுடிவதில்லை! மாடமாளிகைகள், மகத்தான ஆலைகள், பெருமை பொருந்திய பொருள்கள்—எல்லாம் தொழிலாளர்களின் உழைப்பிலே விளைந்த செல்வங்கள். அவன் உழைப்பிலே, அகில உலகமும் மகிழ்கிறது. ஆனால் அவன் குடும்பம், அவன்வாழ்வு, ஏழ்மையிலே, இல்லாமையிலே சிக்கிச் சிதைந்து, மண்மேடுபோல மாறிக் கொண்டிருக்கிறது!

தொழிலாளர்கள்—என்றால்.ஆலைகளிலே உழைப்பவர்கள்மட்டுமல்ல, ஏர்பிடிப்போர், கூலிக்கு வேலை செய்வோர், குடிசைத் தொழில்களிலே ஈடுபட்டுக்கிடப்போர் எல்லோரும் அந்த உழைப்புக்கூட்டத்தின் பிம்பங்கள் தான்!

இந்தியாவில் பெரும் ஆலைத்தொழிலாளர்கள் மொத்தம் ஒன்றரைக் கோடிபேர், பாக்டரிகளிலே வேலை செய்வோர் சுமார் 20 லட்சம்தான். தங்களுக்கெனச்சொத்தோ, நிலமோ இல்லாது உடலையும் உழைப்பையும் நம்பிவாழும் விவசாயத் தொழிலாளர்கள் புதுச்சகாப்தத்தில் தோன்றியவர்கள். இவர்களின் வளர்ச்சி, அதிகமானது, கடந்த முதலாவது உலகப்போருக்குப் பின்னர்தான்.

தங்களது கோரிக்கைகளையும்,தங்களுக்குத் தேவையானவைகளைப் பெறவும், தங்கள் குறைகளின் எதிரொலியாக இருக்கவுமே முதலில் தொழிலாளர்கள்—தங்கட்கெனச் சங்கங்கள் நிறுவிக்கொண்டனர். அவைகளை வலுப்படுத்தி, கட்டுப்பாடாகஇருந்து, தங்கள் கோரிக்கைகளைபெறத் துவங்கினர். 1920-ல் தான், அகில இந்திய ரீதியிலபொதுவான தொழிலாளர் இயக்கமாக அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரஸ் உண்டாயிற்று. அச்சங்கத்துடன், ஆங்காங்குபல்வேறுமாகாணத் தொழிற்சங்கங்கள் தொடர்பு கொண்டு, ஐக்கிய முன்னணியுடன், தங்கள் கோரிக்கைகளைப் பெறத் துவங்கினர்.

அதுமுதல்,எங்கும் தொழிலாளர் இயக்கத்திலே ஒருமறுமலர்ச்சி ஏற்பட்டதெனக்கூறலாம். கோரிக்கைகள், நிறைவேற்றப் படாவிட்டாலோ அல்லது மறுக்கப்பட்டாலோ, கண்டித்து வேலைநிறுத்தங்கள், செய்வதும், கட்டுக்கோப்பாகஇருந்து காரியங்களைச்சாதிப்பதுமான செயல்கள் அதிகம் ஆயின. 1921-ம் ஆண்டில் மட்டும் இதுபோன்ற வேலை நிறுத்தங்கள் 396 நடைபெற்றனவாம்.

நல்லெண்ணத்துடன், உழைப்பாளிகளின் கூட்டுவாழ்வையும்,நலத்தையும் குறிக்கோளாகக்கொண்டு ஆரம்பத்தில் துவக்கப்பட்டன தொழிற்சங்கங்கள். ஆனால், இப்போதோ, தொழிற் சங்கங்கள் முதலாளிகளின் "சீட்டாட்டமாகவும்" அரசியல் கட்சிகளின் 'சதுரங்கவிளையாட்டுக் கூடமாகவும்' ஆகிவிட்டன!

தொழிலாளர்கள் — மெழுகைப் போன்றவர்கள், எந்தமாதிரியான பொம்மையையும், அந்த மெழுகைக் கொண்டு செய்துகொள்ளலாம். நன்மை நாடித்தருவதாக நடித்தால், நம்பி, ஏமாறும், நிலையிலிருப்போர்கள், அவர்கள் வாழ்க்கையில் வறுமையும் ஏழ்மையும் தாண்டவமாடுவதால், அதைப்போக்கி நல்வாழ்வு அளிப்பதாக யார் முன்வந்து கூறினும், அவர்கள்பக்கம் எளிதில் சாய்ந்துவிடுவார்கள்! வெள்ளத்தில் தத்தளிப்பவன் — சிறுதுரும்பைக் கண்டால்கூட, அதைப்பிடித்துக் கரையேறமுயல்வனல்லவா, அதைப் போல!

ஆனால், அதே வேளையில் தொழிலாளர் சக்தி—ஒரு மாபெரும் கடல், மகத்தானது, எதையும் சாதிக்கக் கூடியது.

எனவேதான், அரசியல் கட்சிகள், தொழிலாளர்களின் பலத்தைத் தங்கள் ஆதரவாக வைத்துக்கொண்டு, தங்கள் நலனைச் சாதிக்க ஆசை கொண்டு, தொழிலாளர்களின் ஆபத்பாந்தவர்கள்போல நடிக்க முன் வந்து விடுகின்றன.

அதே வேளையில் தொழிலாளர்களுக்காகவே பாடுபடும் கட்சிகளும் இல்லையென்று கூறமுடியாது. எனினும், இந்தியாவைப் பொறுத்த மட்டில், இருக்கும் அரசியல் தலைவர்கள்—தொழிலாளர்கள் என்ற மாடிப்படிகளின் மூலம், தங்கள் ஆசை நிறைவேற வேண்டும் என்கிற கோபுரத்தை அடைய, சூதுத் திட்டம் வகுக்கிறார்கள்.

கம்யூனிஸ்டுகள், சோஷியலிஸ்டுகள், காங்கிரசார், ஆகிய ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த, தொழிற் சங்கங்களும் இந்தியாவில் இருக்கின்றன.

தொழிலாளர்களின் நலனில் உண்மை அக்கரையும், தொண்டாற்றும் ஆர்வமும், இக்கட்சிகளுக்கு இல்லையென்று கூற முடியாதென்றாலும், தொழிலாளர் சக்தி—கட்சி மாச்சரியத்தால் சின்னா பின்னப் பட்டுத்தான் போகின்றன.

இவைகளில் தொழிலாளர் நலன்களையே பாதிக்கும் வகையில் முதலாளிகளின் சூதுமதி, ஆதரவு ஆகியவைகளுடன் 'உற்பத்தி' செய்யப்பட்ட தொழிற் சங்கமும் உண்டு. இந்த வகையில், இந்தியாவைப் பொறுத்தவரையில் இருப்பது, அகில இந்திய தேசீய தொழிற்சங்கக் காங்கிரஸ் என்பதாகும்—இது சர்க்காருடைய ஆதரவை, அமோகமாகப் பெற்றது; பட்டேலின் சிருஷ்டி! காங்கிரசின் கைப்பாவை!!

* * *

உலகத்தை உருவாக்கும் உத்தமர்களாகிய தொழிலாளர்களின் உரிமைப் போர், உருவாக நடைபெறாது, கட்சிச் சண்டையிலும், கொடித் தகராறிலும், கொலை நிகழ்ச்சிகளிலும், சிதறி வீணாவதைத்தான், அறிஞர் ராய், குறிப்பிட்டிருக்கிறார். அவரது, கருத்து யாவும் சிந்தனைச் செலவம் என்று கருதக்கூடியவையாகும்.

கட்சியின் பெயர்களும், தலைவர்கள் மீதுள்ள "பக்தி" மனப்பான்மையும், தொழிலாளர்களின் சக்தியை விழலுக்கு இறைத்த நீராகும்படி. செய்து விடுகின்றன!

கல்வியறிவும், அனுபவத் திறனும், ஆய்ந்தோய்ந்து பார்க்கும் தன்மையும், உழைத்து வாழும் தொழிலாளர்கள் மத்தியில் அதிகம் பரவாத காரணத்தால், ஆவேசமும், சச்சரவும் அவர்களுக்குள்ளாகவே உருவாகி விடுகின்றன—முதலாளித்துவக் கப்பல், தொழிலாளர் சமுத்திரத்தில் துயரமில்லாது கடக்கும் வழியும் வசதியும் ஏற்பட்டு விடுகிறது!

இதைத்தான் ராய் குறிப்பிட்டுள்ளார்; அரசியல் கட்சிகளின் ஆட்டக்காயாகத்தொழிலாளர் சக்தி ஆகக்கூடாது என்று வெளியிட்டுள்ளார்.

இந்த அறிவுரையைத் தொழிலாளத் தோழர்களின் பார்வைக்குச் சமர்ப்பிக்கிறோம். அதோடு, தொழிலாளர் வாழ்வுக்குப் பாடுபட வேண்டும் என்று சொல்லித் திரியும் தலைவர்கள் சிந்தனைக்கும் வைக்கிறோம்—தொழிலாளர்களைத் திரட்டுங்கள், பொதுவான முன்னணியுடன்! கட்சி முத்திரைகளைக் குத்திக் கலக்கிவிடாதீர்கள் என்ற வேண்டுகோளுடன்!

—❀—

## திபேத்

—0—

சீனா. சோவியத் யூனியன், இந்தியா மூன்றுக்கும் இடையில் திபேத் இருக்கிறது. சோவியத் யூனியனையும் சீனாவையும் எதிர்த்து யுத்தம் தொடுப்பதற்கு, திபேத்தைச் சீனாவிலிருந்து துண்டித்து,அதைத்தங்கள் ஆதிக்கத்தின் கீழ்கொண்டுவருவதற்கு பிரிட்டிஷ்-அமெரிக்க ஏகாதிபத்திய வெறியர்கள் தலை கீழாக நிற்கின்றனர். இவர்களுடைய தூண்டுதலின் பேரில் திபேத்தின் தலைநகரான லாஸாவிலிருக்கும் ஏகாதிபத்திய கைப்பாவைகள், திபேத்தின் "சுதந்திரத்தை"க் காட்டும் பொருட்டு அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, நேபால் சீனா முதலிய நாடுகளுக்கு நல்லெண்ணத் தூதுகோஷடி அனுப்பத் திட்டமிட்டிருந்ததாக அமெரிக்க பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நாடகத்திற்கு நேரு அரசாங்கம் உடந்தை. இந்தியாவின் மூலமாகத்தான் திபேத்துக்கு ஏகாதிபத்திய ஏஜெண்டுகள் போன மணியமாக விருக்கின்றனர். திபேத்திலிருந்து தூது கோஷ்டிகள் இந்தியா மூலமாகத்தான் பவனி வரப்போகின்றனர்.

நேரு அரசாங்கம்உண்மையாகவே சீனமக்கள் அரசாங்கத்தை அங்கீகரித்திருந்தால், சீனதேசத்தின் ஒரு பகுதியான திபேத்தில், ஏகாதிபத்ய சூழ்ச்சிக்கு உடந்தையாகவிருக்குமா? இவர்கள் மாபெரும் அண்டை நாட்டின் நேச உறவை விரும்புவதாகப் பிதற்றுவதில் இம்மியேனும்உண்மையிருந்தால், சீனாவின் உள்நாட்டு விஷயத்தில் தலையிட்டு அந்நாட்டின் ஒருபகுதியில் நுழைந்து விரோத ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் அதைக் கபளீகரம் செய்வதற்கு ஏகாதிபத்ய நாடுகளுக்கு இந்தியாமூலமாக வழி திறந்துவிடுமா? ஒருக்காலும் செய்யாது. ஆனால் நேரு அரசாங்கத்தின் அங்கீகாரமும், நேசபாவமும் வெறும் புரட்டு, அதன் அயல்நாட்டு கொள்கை ஆங்கிலோ — அமெரிக்க யுத்தவெறியர்களின் உலகாதிக்கத் திட்டத்திற்கு ஒத்துஊதும் அடிமை அரசியல் அயல் நாட்டுக்கொள்கை.

சீன மக்கள் அரசாங்கம், யுத்த வெறியர் அரசாங்கங்களுக்கு பலமான எச்சரிக்கை கொடுத்திருக்கிறது. அதைக் கீழே தருகிறோம்:—

"திபேத் சீனமக்கள் குடியரசின் பிரதேசம். அதன் தலைநகரான லாஸாவிலிருக்கும் அதிகாரிகள் பிளவு நோக்கத்துடன் வெளிநாடுகளுக்குத் தூதுகோஷ்டிகள் எதுவும் அனுப்பினால் அது சட்ட விரோதமானதாகும்."

"அத்தகைய சட்ட விரோதமான தூதுகோஷ்டியை வரவேற்கும் எந்த நாடும், சீன மக்கள் குடியரசினிடத்தில் விரோத மனோபாவம் கொண்டுள்ளதாகக் கருதப்படும்."

"லாஸா அதிகாரிகள் சுயேச்சையாக எந்தத் தூதுகோஷ்டியையும் அனுப்புவதற்கு உரிமையில்லை. அதுவும் திபேத்தின் "சுதந்திரத்தை"நிருபணம் செய்வதற்காக அனுப்பப்படுவதென்றால் சொல்லவே வேண்டாம்."

"திபேத் மக்கள் சீன மக்கள் குடியரசில் சேரவேண்டுமெனக் கோருகின்றனர். இந்த விருப்பத்திற்கு இணங்க, பேச்சு வார்த்தைநடத்துவதற்கு லாஸா அதிகாரிகள் பீகிங்குக்கு தூதுகோஷ்டி அனுப்பினால் அது வரவேற்கப்படும்."

"போரணி"

❀

## தமிழ் நாகரிகம்

"கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடிக்கும் முன் அமெரிக்கர்களிடையே இருந்த நாகரிகம் தமிழ் நாட்டிலிருந்தே சென்றிருக்கவேண்டும்."

—டாக்டர் ஜுவான் மாரின்

# ஏன் இந்த அச்சமும் ஆவேசமும்!

இப்போது சில காலமாகத் ...ன் தமிழ் மக்களுக்கும் ...து விழிப்புணர்ச்சி உண்டாகித் ...கள் உண்மை நிலையினையும் உரி...மையும் பாதுகாத்துப் பயன்பெற ...ண்டுமென்ற எண்ணமும் எழுச்...யும் உண்டாகியிருக்கிறது. நம்மை ...விக்கவந்த உயரிய நோக்கம் ...ண்ட பெரியார்களைப் போற்ற..., அவர்கள் காட்டியவழி நடக்க... வேண்டுமென்ற சிறந்த பண்...ப்பெற்றுள்ளனர். இதன் காரண...கவே இப்போது சில ஆண்டு...ாக நமக்குப் புத்தாயிரளித்த ...வுச் செம்மலாம் திருவள்ளுவ...ப் போற்றவும், அவர் நாளைக் ...ண்டாடவுமான நன்னெறியில் தமிழ் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு ...ன் தோன்றி உலக மக்களுக்கு ...ழியாச் செல்வமாகிய அறிவுக் ...ஞ்சியத்தை வழங்கிய வள்ளலைப் ...ற்றி நினைக்கவும், அவருடைய ...ரிய பண்புகளை உணரவும் இத்...னைக்காலமும் நம்மவர் முன்வரா... இருந்ததை நினைக்கும்போது ...ண்மையிலேயே வெட்கமும் ...ருத்தமுமே உண்டாகின்றது.

திருவள்ளுவரைப்பற்றி மற்றநாட்...வரும் மற்ற மொழியினரும் ...ணர்ந்து புகழ்மாலை சூட்டியகாலங்...ளிலெல்லாம், நாம் வேறொரு ...றைக்கு இழுக்கப்பட்டு, அங்கே ...ன்றுகொண்டு, அத்துறையில் ...காண்டுவந்து இறக்குமதி செய்யப்...ட்ட பொருள்களையும், அவற்றைக் ...காண்டு வந்தோரையும் போற்றிப் ...கழ்ந்துகொண்டிருந்தோமேயன்றி, ...இங்கு கொண்டுவந்து இறக்குமதி ...செய்யப்பட்டிருக்கும் பொருள்கள் ...ம்முடையவைதானா? நமக்கு ஏற்...வைதானா? இவற்றைக்கொண்டு ...ந்தோர் நம்மவர்தானா? நம்மவர் ...ல்லாவிட்டாலும் நம்முடைய நல...ல் நாட்டங் கொண்டவர்தானா?" ...ன்பனபற்றி எண்ணிப்பார்க்கா...லேயே, கொண்டு வரப்பட்ட ...பாருள்களையும், கொண்டுவந்தோ...ரையும் வரவேற்றுப் பாராட்டிப் ...போற்றிப் புகழ்ந்துகொண்டு இருந்து...விட்டோம்—இன்றும் அந்தநிலையில் தான் நம்மவரில் பெரும்பாலோர் இருந்துகொண்டிருக்கின்றனர்.

நம்முடைய கவனமும் கருத்தும் வேறொரு துறையில் செலுத்தப்பட்ட காரணத்தால்தான், நம்மைப் பற்றிப் பிறர் புகழ்ந்த காலத்திலெல்லாம், நம்மைப்பற்றி இவர்கள் ஏன—எதற்காக இவ்வளவு புகழ்கிறார்கள் என்பதைக்கூட மறந்து, வேறொருவர் தந்த மயக்க மருந்தை உண்டு அறிவு மழுங்கிக் கிடந்துவிட்டோம்.

> "வள்ளுவர் தாம் கூறவந்த அறவுரைகளை அழுத்தம் திருத்தமாகச் செய்யுள் நடையில் கூறுவதைப் போல உள்ள மற்றொரு நூலை மக்களாய்ப் பிறந்தோர் பேசும் வேறு எந்த மொழியிலும் காணல் முடியாது"

என்று மேல்நாட்டுப் பேரறிஞரான ரெவரண்டு பெர்சிவல் போன்றோர் கூறிய காலத்தில், நாம் நறுகிய உள்ளத்தைப் படைத்தவர்களாக ஆக்கப்பட்டு, தமிழ் மறையை மறந்து, வடமறையைப் போற்றிக் கொண்டிருந்தோம். இன்றும் அந்த நிலை மாறிவிட்டதென்று கூறுவதற்கில்லை.

தமிழ் மக்களின், ஏன், உலக மக்கள் அனைவருடையவும் அறிவை வளரச் செய்து அவர்களை மேல நிலைக்கு உயர்த்தவல்ல திருக்குறளையாவது, அதன் கருத்தோடொத்த மற்றைச் சங்க நூற்களையாவது நாம் கற்கவேண்டும்—பிறரையும் கற்கச் செய்ய வேண்டுமென்று ஒருசிறிதும் நினைத்ததுமில்லை—பேசியதுமில்லை. என்றபோதிலும், அவர்கள், தங்களைத் தமிழ் மக்கள் என்றும், தமிழ்ப் பற்று உடையவர்கள் என்றும் சொல்லிப் பெருமை தேடிக் கொள்வதில் சிறிதும் பின்வாங்குவதில்லை. திருக்குறள் போன்ற அறிவு நூற்களை மக்கள் கற்கவும் உணரவும் தொடங்கிவிட்டால், அவர்களிடையே புகுத்தப்பட்டிருக்கும் மூடநம்பிக்கைகள் அழிந்தொழிந்துவிடுமென்று இவர்கள் அஞ்சுகின்றனர் போலும்! தமிழ் நாட்டிலுள்ள மத சம்பந்தமான ஆலயங்கள், மடங்களையும் அங்கெல்லாம் நடைபெறும் விழாக்கள் குரு பூசைகளையும் கணக்கிட்டுப் பார்க்கும்போது, திருவள்ளுவருக்கென்று ஒரு மடமாவது, அவர் நாளைக் கொண்டாடுவதற்கு ஒரு பொது இடமாவது இருக்கிறதென்று துணிந்து கூறுவதற்கில்லையே! இப்போது சிலகாலமாகத்தான் சிற்சில இடங்களில் அத்திபூத்தாற் போலத் திருவள்ளுவர் நினைவுநாள் கொண்டாடப்படுகிறதென்றால், அது, ஒரு சிலரால், அவர்களுடைய தனி முயற்சியின் காரணமாக ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் கூட்டப் பெற்றுத் திருவள்ளுவரைப் பற்றியும் அவருடைய நூலைப் பற்றியும் இரண்டொரு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு முடிகிறதேயன்றி, மற்ற மடாலயங்களுக்கு இருப்பது போன்ற நிலையான இடவசதியும் பொருள் வளமும் இல்லையே! அவை அமையும்படி செய்ய முயலவாரும் இல்லையே! முயன்றாலும் அம்முயற்சி கைகூடிவர ஆதரிப்பாரும் இல்லையே! கோயில், மடங்கள் கட்டுவதற்கும், குருபூசை செய்வதற்கும், குடமுழுக்கு நிகழ்த்துவதற்கும், பொன்—வெள்ளித் தேர்களும் வாகனங்களும் செய்வதற்கும் அள்ளி அள்ளிக் கொடுக்கும் செல்வக் கைகள், திருவள்ளுவர் என்றால் — திருக்குறள் என்றால் — தமிழ் என்றால் ஏனோ முடமாய் விடுகின்றனவே! இந்த இரங்கத்தக்க நிலை ஒழியும் நாள் என்நாளோ? ஒழிந்து தமிழ் மக்கள் தங்கள் உண்மை நிலையை உணர்ந்து முன்னேறுவது எக்காலமோ?

இவ்வாண்டு, சென்னையில் 5—2—50-ல் நடைபெற்ற திருக்குறள் விழாக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த முன்னாள் முதலவர் தோழர் ஓ. பி. இராமசாமி அவர்கள் பேசுகையில்,

> "கடவுள் இல்லையென்று சொல்லும் நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது"

என்று குறிப்பிட்டுப் பேசியுள்ளார். அவர் யாரை மனதில் வைத்துக் கொண்டு பேசினாரோ, அது நமக்குத் தெரியாது—அதைப்பற்றி நாம் கவனமோ கருத்தோ செலுத்த வேண்டியதுமில்லை, என்ற போதி

லும், இப்போது அந்த உணர்ச்சி பலரிடையே தோன்றியிருப்பது மட்டும் உண்மை என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. காரணம், இப்போது நம்மால் வழிபடப்படும் கடவுளர் கருத்துக்கும் எட்டாத கற்பனையால் கட்டப்பட்டிருப்பதே யாகும். கடவுள் என்ற கருத்து நிறைந்த சொல்லின் பொருளையே இன்றைய கடவுட் கதைகள் கரைப்படுத்திவிட்டன. எந்தவிதமான வடிவமும் தேவைப்படாத கடவுளுக்குக் கணக்கில் அடங்காத வடிவங்களும், அங்கிங்கெனாதபடி எங்கும் எவரிடத்தும் அடங்கியுள்ள கடவுளுக்கு ஒரு இடமும் (கோயிலும்), மறவாத கடவுளை மறந்து மறந்து நினைக்கும் விதமான வழிபாடுகளும், அவ்வழிபாடுகளுக்குரியபாடல்களும் மந்திரங்களும், காலையிலும் மாலையிலும் கடவுளைத் தொழ என்ற கால அட்டவணைகளும் இன்னபிற ஏற்பாடுகளும் உண்டாக்கப்பட்டுக், கடவுள் என்ற புனிதமான சொல்லையே புரையோடும்படி செய்யப்பட்டுவிட்டது.

கடவுள் என்றசொல்லுக்கு, எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஒரு மெய்ப்பொருள் அல்லது மெய்யுணர்வு என்பதே பொருளாகும். இத்தகைய சிறந்த கருத்தமைந்த கடவுள் என்ற சொல் தமிழ்மொழியைத் தவிர வேறெம் மொழியிலும் அமையவில்லை. வேறு மொழியினர் எல்லாரும் இம் மெய்யுணர்வைக் குறிக்கும் சொல்லுக்கு வழங்கிவரும் பெயர்கள் உண்மையிலேயே அப்பொருளைக் குறியாதுவேறுவகையிற் பொருள் தந்து நிற்கின்றன. அவையெல்லாம் தனிப்பட்ட ஒருவனையோ ஒருத்தியையோ குறிப்பிட்டு நிற்கின்றனவே யன்றித், தமிழ்மொழியிற் காணப்படுவது போல மக்கள் அனைவர்க்கும் பொதுவான மெய்யுணர்வைக் குறித்து நிற்பனவாயில்லை. எடுத்துக் காட்டாகச் 'சிவன்' என்ற சொல், சிவப்பு நிறமுடைய ஒருவனை அல்லது செந்நிறமான நெருப்பைக் குறித்துச், செந்நிறமுள்ள ஒருவன் அல்லது ஒன்றன் பெயராகப் பொருள் தந்து நிற்கின்றதே யன்றிக், கடவுள் என்ற சொல்லுக்கு அமைந்திருக்கும் மெய்ப்பொருள் அல்லது மெய்யுணர்வு என்ற பொருளில் அது அமையவில்லை. கடவுள் என்ற சொல்லுக்கு இத்தகைய முரண்பாடும் மாறுபாடும் நிறைந்த பொருள்களை உண்டாக்கியதால் தான், இக்காலத்தில் கடவுள் இல்லை என்று சொல்லும் நிலை ஏற்பட்டிருக்கிறதென்பதை அன்பர் ஓ. பி. ஆர். அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்று விரும்புகிறோம். கடவுள் என்ற சொல்லுக்கு அதன் உண்மையான பொருள் விளக்கப்பட்டு, அந்தப் பொருள் நடைமுறைக்குக் கொண்டுவரும்படி செய்யப்பட்டிருந்தால், கடவுள் இல்லை என்று சொல்லும் நிலை இப்பொழுது மட்டுமல்ல எப்பொழுதுமே ஏற்படாதென்பதைத் திட்டமாகக் கூறுகிறோம்.

சைவர்கள் தாங்கள் வணங்கும் சிவனுக்குக் கடவுள் என்ற சொல்லைப் பொருந்தும்படி செய்வதற்காகத் திருக்குறளையே மாற்றியமைத்துவிட்டார்கள் என்ற உண்மை பலருக்குத் தெரியாதென்றே கருதுகிறோம். சைவர்கள், வள்ளுவர் இவர்தான் என்று கற்பிக்க ஒரு வடிவத்தை திருநீற்றாலும் உருத்திராக்க மணியாலும் அழகுபடுத்திக் காட்டியதோடு நின்றுவிட்டாலாவது, அவர்கள் ஏதோ வள்ளுவர் மீது கொண்ட பற்றுதல் காரணமாக அவரையும் தங்கள் சமயத்தைச் சார்ந்தவராகக் காட்டிக் கொள்வதில் ஆர்வங்கொண்டு அவ்விதம் செய்துவிட்டார்கள் என்று வாளா இருந்துவிடலாம். ஆனால், அவர்கள் திருக்குறளையே மாற்றி அமைத்துவிட்டார்கள். இல்லை! இல்லை!! திருத்தி அமைத்துவிட்டார்கள்!

திருக்குறளில் மெய்யுணர்தல் என்று ஒரு அதிகாரம் காணப்படுகிறது. அதில்,

"பிறப்பெனும்பேதைமை நீங்கிச்
சிறப்பெனும், செம்பொருள்
காண்பதறிவு"

என்ற ஒரு வெண்பா இருக்கிறது. இந்த வெண்பாவைச் சைவர்கள் தங்கள் சிவனை நிலைபேறுடையதாகச் செய்வதற்குத் திருத்தி அமைத்துப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

திருவள்ளுவர் உண்மையாகவே 'மெய்யுணர்தல்' என்ற ஒரு அதிகாரத்தை வகுத்து, அதில் இந்த வெண்பாவைப் பாடியிருந்தால், அது, மேலே எடுத்துக்காட்டிய வெண்பாபோல் ஒருபோதும் அமைந்திருக்காது. பிறப்பினால் மக்கள் அடையும் சீரிய கருத்து நிரம்பிய உண்மைகளை வெளியிட்ட திருவள்ளுவர், பிறப்பைப்பேதைமையாக்கி இருக்கவேமாட்டார். பிறப்பே பேதைமை உடையதென்றால், பிறப்பின் உயர்வைப் பற்றி அவர் பேசியிருக்கவே மாட்டார். சைவர்கள் தங்களுடைய பேதைமையைத் திருவள்ளுவர்பால் செலுத்தியது உண்மையிலேயே மன்னிக்க முடியாத குற்றமாகும்.

திருவள்ளுவர் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தை வகுத்து, அதன் வாயிலாகவும் தம்முடைய கருத்துக்களை வெளியிட்டிருந்தால், அதில்,

"பிறப்பினும் பேதைமை நீங்கிச்
சிறப்பினும், செம்பொருள்
காண்பதறிவு"

என்றுதான் கூறி இருக்கமுடியும். அதாவது, பிறப்பினால் உண்டாகின்ற அறியாமையினின்றும் நீங்கிச், சிறப்பைத்தருகின்ற செவ்விய—சிறந்த—மெய்ப்பொருளை அதாவது பகுத்தறிவைக் கண்டு அதன்படி நடப்பதே அறிவு என்ற பொருளில்தான் திருவள்ளுவர் பாடியிருக்க முடியுமேயன்றி, முட்டாள்தனமாய்ப் பிறவி எடுப்பதைப் பேதைமை என்று கூறியிருக்கமாட்டார்.

ஒருவன் பிறக்கும்போது அறியாமையோடு பிறக்கின்றான்; பின்னர் அவனுடைய முயற்சியால் அவனுக்குப் படிப்படியாக அறிவு உண்டாகின்றது; அதன் பின்னர், தான் அறிந்தவற்றை உணர்ந்து பார்க்கும் பகுத்தறிவு உண்டாகின்றது. அந்தப் பகுத்தறிவு அறிவுக்கறிவாய் நின்று அவனை நல்வழியிற்செலுத்துகின்றது, ஆகையால் ஒருவனுடைய சாதாரண அறிவுக்குச் சிறப்புத்

அடுத்த வாரம்!
தில்லை. வில்லாளன்
தீட்டிய
"மனப் போர்"
தொடர் கதை
துவங்குகிறது!

செந்து அவனை நல்வழியிற் செலுத்தும் பகுத்தறிவின்படி நடப்பதே செம்பொருள் காணும் அறிவு என்றுதான் திருவள்ளுவர் கூறியிருக்க முடியுமேயன்றிப், பிறப்பையே பேதைமை என்று கூறியிருக்கமாட்டார்.

நாம் கூறும் இந்த உண்மையினைக் காலஞ்சென்ற வ. உ. சிதம்பரனார் அவர்கள் தாம் எழுதிய திருக்குறள் அறத்துபால் உரையில் நன்கு வலியுறுத்திக் கூறியுள்ளார். நாம் கூறுவதில் ஐயமோ, அச்சமோ, பதட்டமோ கொண்டோர் வ. உ. சி. எழுதிய அறத்துபால் என்ற நூலை எடுத்துப் பார்த்தால் உண்மை விளங்கும். இந்த உண்மைமட்டுமல்ல, அவர்கள் திகைப்படையக்கூடிய இன்னும் பல உண்மைகளை அறிஞர் சிதம்பரனார் அவர்கள் தம்முடைய நூலில் விளக்கியுள்ளார்.

திருக்குறளில் காணப்படும் 'கடவுள் வாழ்த்து', 'வான் சிறப்பு', 'நீத்தார் பெருமை' 'அவாவறுத்தல்' முதலான அதிகாரங்கள் திருவள்ளுவரால் செய்யப்படாத இடைச் சேருகல்கள் என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார் தக்க காரணங்களைக் காட்டி.

'கடவுள் வாழ்த்து' என்ற அதிகாரமும், 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரமும் ஒரே நூலில் அமைய முடியாதென்பதற்கு அசைக்க முடியாத காரணங்களை வ. உ. சி. அவர்கள் காட்டியுள்ளார்.

எனவேதான், 'கடவுள் இல்லை என்று சொல்லும்நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது' என்று அச்சத்தோடும் வருத்தத்தோடும் முறையிட்டுக் கொள்ளும் அன்பர் ஓ. பி. இராமசாமி அவர்களும் பிறரும் வ. உ. சி. அவர்கள் எழுதிய திருக்குறள் உரைநூலை ஒருமுறை வாங்கிப் படித்துத் தங்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சத்தையும் ஆவேசத்தையும் அடக்கி, மக்கள் திருக்குறளைப் படிப்பதால் அடையும் நற்பயன்களை, நச்சுக் கருத்துக்களைக் கலவாமல் தெளிவாக விளக்கவேண்டுமென்று விரும்புகிறோம்.

வறிதே, திருவள்ளுவர் நாளைக் கொண்டாடுவதாலோ, திருக்குறள் விழாவை நடத்துவதாலோ மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்பட்டுவிடாது. உண்மையான மெய்ப்பொருளை விளக்கும் திருக்குறளை யானைமீதுவைத்து ஊர்வலம் வரும் அதே சமயத்தில், கற்பனைக்கும் எட்டாதகடவுளைப்பாடும் திருப்புகழைப் பஜனை பாடிக்கொண்டு செல்வது தீந்தமிழ்த் திருக்குறளுக்குச் சிறப்புத் தராது என்பதனை அடுத்த ஆண்டில் நடைபெறும் திருக்குறள் விழாவிலாவது உணர்ந்து, வள்ளுவர் கூறிய திருக்குறள் வெண்பாக்களை மக்களின் செவிகளில் பட்டுச் சிந்தனையில் சேர்ப்பிக்கும் சீரிய பணியினை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

திருவள்ளுவரைப் போலவே நாமும் உண்மையை உலகுக்கு உரைக்க அச்சப்படக்கூடாது என்ற பண்பைப் பெற்றுக் கொள்வோமானால், நாட்டின் இன்றைய சீரழிந்த நிலையை மிகவும் விரைவில் மாற்றி முன்னேற்றப் பாதையில் செல்லமுடியும். அங்ஙனமன்றித், திருவள்ளுவர் கூறாததை அவர் கூறியதாகவும், கூறியதையே மாற்றியும் திருத்தியும் "இவையெல்லாம் பொய்யா மொழிப் புலவராம் திருவள்ளுவ நாயனாரால் கூறப்பட்டது தெரியுமா" என்று அச்சமூட்டி ஆவேசம் எழும்பப் பேசிவிடுவதால் மட்டும் திருக்குறளால் மக்கள் நன்மை அடைந்துவிட மாட்டார்கள். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்ற பூரிப்போடு இருந்துவிடக் கூடாது. திருக்குறளால தமிழ் நாடு வான் புகழ் கொண்டது ஒருபுறம் இருக்கட்டும் என்று விட்டுவிட்டு, வள்ளுவன் தன்னை உலகினுக்குத் தந்த தமிழ்நாடு என்பதையும் கொஞ்சம் மறந்துவிட்டு, வள்ளுவர் பிறந்த நாடாகிய தமிழ் நாட்டில் உள்ள மக்களிலே நூற்றுக்கு எத்தனை பேர் வள்ளுவரைப் பற்றியும் அவர் ஆக்கித் தந்த நூலைப் பற்றியும் அறிந்திருக்கின்றனர்—அதனால் புகழும் பெருமையும் பூரிப்பும் அடைந்திருக்கின்றனர் என்பதை உணர்ந்து பார்க்கும்போது உண்மையிலேயே வெட்கப்பட வேண்டும். பாரதியார் போன்ற ஒருவர் இருவர் வள்ளுவரைப் பற்றி உணர்ந்ததை ஆதாரமாக வைத்துக்கொண்டு, பார்முழுவதுமே வள்ளுவரை உணர்ந்துவிட்டதாகவாய்ப்பின்றி அலறுவதால் அடையும் பயன் யாதும் இல்லை. எனவேதான், வள்ளுவர் கூறிய நெறியை முறையாக உணர்ந்து அதன்படி நாமும் நடந்து பிறரையும் நடக்கும்படி செய்யவேண்டும். வள்ளுவர் கூறாததைக் கூறவும் வேண்டாம், கூறியதை மறைக்கவும் வேண்டாம். முன்னதைக் கூறுவதில் ஆவேசமும், பின்னதைக் கூறுவதில் அச்சமும் கொள்ளாமல், வள்ளுவர் கூறிய வாய்மைகளை வாயளவில் மட்டும் கொள்ளாமல், நெஞ்சில் இருத்தி நேர்மைப் பாதையில் நாமும் நம்மைச் சூழ்ந்துள்ள அனைவரும் நடந்து பயன்பெற வேண்டுமென்பதே திருக்குறளை ஆக்கியதன் நோக்கமாகும் என்பதை உணருவோமானால், கடவுள் இல்லை என்று சொலலும் நிலை ஏற்பட்டுவிட்டதே என்ற அச்சமும், அதனால் உண்டாகும் ஆவேசமும் ஏற்படக் காரணமில்லை. இதனைத் திருக்குறளைப்பற்றிய உண்மைக் கருத்துகளை அறிய விரும்புவோர் அவசியம் தங்கள் மனதில் இருத்திக்கொள்ள வேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

✲

## துயர கீதம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வரையில் இன்பகீதம் எழும்ப முடியாது; துயர கீதம்தான் எழும்பிக் கொண்டிருக்கும்! கழனிகள், கலப்பைகள், ஆலைகள், மாளிகைகள், எல்லாம் நாட்டைச் சேர்ந்தது; நாட்டில் வாழும் நமது மக்களைச் சேர்ந்தது என்றநிலை மலரவேண்டும்!

"மாளிகை மளிகைச் செட்டியாருடையது"

"ஆலை, பணம் பெருத்தானுடையது"

"கழனிகள், பெரிய பண்ணையாருடையது"

என்பது மாறி, எல்லாம் எல்லோருடையது என்று ஏற்படவேண்டும்! அப்போததான் துயர கீதம் ஒழியும்! வேதனையும், விளக்கமும் குறையும்! இதைச் சிந்திக்க வேண்டுகிறோம்—தேசிய மயமாக்க வேண்டும் தொழில்களை என்று சொன்னால் சீற்றங் கொள்பவர்களை! துயர கீதம் மறைய, இந்த அரிச்சுவடியை அறிவது அவசியம்—மிக மிக அவசியம்!!

✲


மாடர்ன் தியேட்டர்ஸ்
பொன்முடி
இப்பொழுது
தென்னாடெங்கும்
வெற்றிகரமாக
நடைபெறுகிறது
டைரக்ஷன்
எல்லிஸ் R. டங்கன்